★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒகஸ்ட் 16 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 192 | Tuesday 16, August, 2022 | 8பக்கங்கள் | 40/-




## இந்தியாவும் இலங்கையும் ஒரு நாணயத்தில் இரு பக்கங்கள்;



# இரு நாடுகளுக்கும் தனித்தனி பயணங்கள் கிடையாது



**அரசு இந்தியாவுடன் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகிறது**

### விமான கையளிப்பு வைபவத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஸாதிக் ஷிஹான்**

இந்தியாவும் இலங்கையும் ஒரு நாணயத்தின் இரு பக்கம் எனவும் இரண்டு நாடுகளுக்கும் தனித்தனி பயணங்கள் கிடையாது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கமானது இந்தியாவுடன் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருவதாக தெரிவித்த ஜனாதிபதி, இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை பலப்படுத்துவதற்கான காலம் கனிந்துள்ளது என்றும் தெரிவித்தார். 04

---

## கடலுணவுகளை வீடுகளுக்கே பெற்றுக்கொள்ள ஏற்பாடு

அமைச்சர் டக்ளஸ் ஆரம்பித்து வைத்தார்



பொது மக்கள் தமக்குத் தேவையான கடலுணவுகளை 'ஒன்லைன்' மூலம் பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறை ஒன்று கடற்றொழில் அமைச்சர் 04

---

மஸ்கெலியா - நல்ல தண்ணி பகுதியில்

## 14 நாட்களாக தொடர்ந்தும் மூடிய நிலையில் பிரதான வீதி




இம்மாதம் முதலாம் திகதி முதல் பெய்துவரும் கடும் மழை காரணமாக மஸ்கெலியா – நல்லதண்ணி பிரதான வீதி மோகினி எல்லைப்பகுதியில் 04

---

## மாநகர சபை வளாகத்தில் தோட்டப்பயிர்ச் செய்கை

### கொழும்பு மாநகர சபையின் முன்மாதிரியான செயற்பாடு



**ஆரியரட்ன கனேகொட**

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவு நெருக்கடிக்கு தீர்வாக, கொழும்பு மாநகர சபை வளாகத்தில் தோட்டப் பயிர்ச் செய்கையை 04

---

இலட்சக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன்

## மடுமாதா ஆவணித் திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத பெருவிழா நேற்று திங்கட்கிழமை (15) காலை 04

---

அரச செலவினங்களை கட்டுப்படுத்தும் அறிவிப்பு;

## சுற்றறிக்கையின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவது கட்டாயம்

அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு ஜனாதிபதி பணிப்பு

"அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துதல்" என்ற தலைப்பில் திறைசேரி செயலாளரால் குறிப்பிடப்பட்ட (26.04.2022) தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022இன் விதிகளின்படி அனைத்து அரச 04

---

நுரைச்சோலை இயந்திரங்கள் சில செயலிழப்பு;

## நாளாந்த மின்வெட்டு நேரம் 03 மணி நேரமாக அதிகரிப்பு

இலங்கை மின்சார சபை நேற்று அறிவிப்பு



நாளாந்த மின்வெட்டு நேரம் நேற்று (15) முதல் நீடிக்கப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதலாவது தொகுதியில் 2 மின் உற்பத்தி இயந்திரங்கள் செயலிழந்ததன் காரணமாக மின்வெட்டை நீடிக்க 04

---

தேர்தல் சட்ட திருத்தம் குறித்து கலந்துரையாடல்;

## அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் அழைப்பு

23ஆம் திகதி சமுகமளிக்க ஆணையாளர் அறிவிப்பு



பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி ஆணைக் குழுவிற்கு வருகை தருமாறு, 04

---

சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான

## தடை நீக்கத்திற்கு கூட்டமைப்பு வரவேற்பு

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் சிலவற்றின் மீதும் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசு நீக்கியமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்புத் 04

---

## ஆள் கடத்தல்காரர்களிடம் சிக்கிக் கொள்ள வேண்டாம்


பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தல்

வெளிநாடுகளுக்குச் செல்லும்போது சட்ட ரீதியாக மாத்திரம் நுழைவதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸ் 04

---

## 4 மாதங்களில் 34 பேரை பலிகொண்ட யானைகள்

### 47 காட்டு யானைகளும் உயிரிழப்பு



யானை மனிதர்களுக்கு இடையிலான மோதலில் 34 பேர் மரணித்துள்ளதாக விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வனவள 04

---

## கச்சதீவை மீட்பதே தமிழக பாஜகவின் இலட்சியம்

மாநில தலைவர் அண்ணாமலை தெரிவிப்பு




கச்சதீவை மீட்பதே தமிழக பாரதீய ஜனதா கட்சியின் இலட்சியம் எனவும் இதனை மீட்க பிரதமர் மோடியிடம் வலியுறுத்துவோம் என்றும் அக்கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார். இராமேஸ்வரத்தில், 04

---

ரூபவாஹினி நிறுவனத்துள் அத்துமீறிய

## தானிஸ் அலிக்கு பிணை வழங்கியது நீதிமன்றம்



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் கடந்த ஜூலை 13ஆம் திகதியன்று பலவந்தமாக நுழைந்து, ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தியமை 04

---

## டயஸ்போராக்களை சந்தித்துரையாட தயார்

அரசு ஏற்பாடு செய்து தருமா?



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசினால், உலகத் தமிழர் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ், ஆவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், உலக 04

---

## 9,000 புள்ளிகளை கடந்த கொழும்பு பங்குச் சந்தை!

மொத்த புரள்வு 5.82 பில். பதிவு

கொழும்பு பங்கு சந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் நேற்று 9,191.52 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில் நாள் ஒன்றுக்கான அனைத்துப் பங்கு விலைச் 04

---

## CDM இயந்திரத்தில் காத்திருந்த அதிர்ச்சி

வாடிக்கையாளரின் நேர்மைக்கு பாராட்டு



யக்கலமுல்ல பிரதேசத்தில் CDM இயந்திரத்தில் பணம் வைப்புச் செய்ய சென்றவருக்கு ஒன்றரை 04

---

கடிதப்பரிமாற்றங்களுக்கு தடை விதிப்பு;

## நீதி விவகாரங்களில் தலையிடக் கூடாது

அரச பிரதானிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் உத்தரவு

அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் விசேட உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார்.

அதனடிப்படையில் நீதிமன்ற விவகாரங்களில் 04



# மருதமடு திருப்பதியின் ஆவணிப் பெருவிழா

மருதமடு திருப்பதியின் ஆவணித் திருவிழா நேற்று திங்கட்கிழமை சிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்றதுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த திருவிழாவில் கலந்து கொண்டனர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை 6.30 மணியளவில் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அனுராதபுரம் மறை மாவட்ட ஆயர் நோபர்ட் அந்த்ராடி ஆண்டகை மற்றும் கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட் திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் மன்னார் மறை மாவட்ட ஆயருடன் இணைந்து திருவிழா திருப்பலியை நிறைவேற்றினர்.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து மடுமாதாவின் திருச் சுரூபபவனி இடம்பெற்றதோடு விசுவாசிகளுக்கு மது மாதாவின் திருச்சுருப ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

கடந்த வருடம் நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக திருவிழா நிகழ்வுகளை விமரிசையாக நடத்துவதற்கு முடியாத நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட விசுவாசிகளே திருவிழாவில் கலந்து கொண்டனர். இம்முறை திருவிழாவில் வடக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருமளவிலான விசுவாசிகள் கலந்து கொண்டனர்.

மடு திருத்தலத்தின் பரிபாலகர் பெப்பி சூசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் பி. கிறிஸ்து நாயகம் அடிகளார் மற்றும் அருட்தந்தையர்கள் அருட் சகோதரிகள் பலரும் திருவிழா கூட்டுத் திருப்பலியில் பங்கேற்றனர்.

படங்கள், தகவல்:
மன்னார் குறூப் நிருபர்












# இடைவிடாத இறைவேண்டல் செய்வதை நிறுத்திவிடக் கூடாது

## திருத்தந்தை பிரான்சிஸ்

எல்லாமே பயனற்று இருப்பதாகத் தெரிகின்ற வேளையிலும்கூட பற்றுறுதியோடு இடைவிடாமல் இறைவேண்டல் செய்யவேண்டும் என்பதை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த சனிக்கிழமையன்று வெளியிட்ட தன் டுவிட்டர் பதிவில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

"கடவுள் நம் செபங்களுக்குப் பதிலளிக்கவில்லைஎன்றும் செபித்து நாம் எமது நேரத்தை வீணாகச் செலவழிக்கின்றோம் எனவும் எல்லாமே வீண் போன்ற உணர்வுகள் எழுகின்றபோதும்கூட நாம் எப்போதும் செபிக்கவேண்டும்.

விண்ணகம் நமக்கு மறைவாய் இருக்கின்றது என்று உணரும் போதும்கூட இறைவேண்டல் செய்வதை நிறுத்திவிடக் கூடாது" என்றும் திருத்தந்தைதெரிவித்துள்ளார்.

இவ்வாறு இடைவிடாமல் நம்பிக்கையோடு கடவுளை மன்றாடவேண்டும் என அடிக்கடி எமக்கு வலியுறுத்திவருகின்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உலகில் போர் இடம்பெறும் பகுதிகளில் அமைதி நிலவவும் போர், வறுமை, அடக்குமுறை போன்றவற்றால் புலம்பெயரும் மக்களுக்காக செபிக்கவேண்டும் என்றும் அழைப்பு விடுத்து வருகின்றார்..

அதேவேளை, போதும் என்ற மனம் கொண்டவர்களும் தங்களிடம் இருப்பதில் நிறைவு காண்பவர்களும் எப்போதும் மகிழ்ந்திருக்கிறார்கள் என மற்றுமொரு செய்தியில் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

தங்களைப் பணக்காரர்களாகவும் வெற்றியாளர்களாகவும் பாதுகாப்பாக இருப்பவர்களாகவும் நினைப்பவர்கள் எல்லாவற்றையும் தங்களுக்கு மட்டுமே உரியதாக எண்ணிக்கொண்டு கடவுளிடமிருந்தும் தங்களைச் சுற்றியுள்ள சகோதர சகோதரிகளிடமிருந்தும் தங்களை அந்நியப்படுத்திக் கொள்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தாங்கள் மிகவும் ஏழைகள் என்றும், தங்களிடம் இருப்பது போதுமானதாக இல்லை என்றும் கருதுபவர்கள் கடவுளுக்கும் தங்கள் அருகில் இருப்போருக்கும் எப்போதும் திறந்த மனம் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள் என எடுத்துரைத்துள்ள திருத்தந்தை இப்படிப்பட்ட ஏழை மக்களே உண்மையான மகிழ்வைக் கண்டடைகிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.





# மரியன்னையின் விண்ணேற்புத் திருவிழா

நாம் கொண்டாடும் மரியாளின் விண்ணேற்புப் பெருவிழா நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டது. மரியாளின் விண்ணேற்பைக் குறித்து தொடக்கத்தில் புனித ஜெர்மானுசும் தமஸ்கு நகர யோவானும் தான் பேசத் தொடங்கினார்கள். அவர்கள் தான் மரியாளின் விண்ணேற்பைக் குறித்து மறையுரை ஆற்றினார்கள். மரியாள் விண்ணகத்திற்கு உடலோடும் ஆன்மாவோடும் எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது, அவர் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்ததால் கடவுள் அவருக்குக் கொடுத்த மிகப் பெரிய கொடையாகும்.

கடவுளால் படைக்கப்பட்ட மனிதனுடைய உடலும் அவனுடைய ஆன்மாவும் புனிதமானது. மாசற்றது (தொநூ 2: 17) அப்படிப்பட்டதை மனிதன் தன்னுடைய தவறால் தூய்மையற்றதாக மாசுள்ளதாக மாற்றிக்கொண்டான்.

எனவே பாவத்தின் சம்பளம் மரணம் (உரோ 5:12) என்பதைப் போன்று மரணமில்லா பெருவாழ்வைக் கொடையாகப் பெற்றிருந்த மனிதன் தான் செய்த பாவத்தினால் அக்கொடையை இழந்தான்; மரணத்தைத் தழுவினான். பாவக்கறையோடு இந்த மண்ணுலகத்தில் பிறந்தாலும் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்தனால் மரணத்தைத் தழுவாமல் விண்ணகத்திற்கு இருவர் எடுத்துக்கொள்ளப்பட்டனர். அவர்கள் வேறுயாருமல்ல ஏனோக்கும், இறைவாக்கினர் எலியாவுமே ஆவர் (தொநூ 5:24, 2 அர 2:1).

ஏனோக்கு கடவுளோடு நடந்தார். அதனால் அவர் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இறைவாக்கினர் எலியா கடவுளுக்கு உகந்த இறைவாக்கினராய் விளங்கினார். அதனால் அவரும் நெருப்புத் தேரோடு விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.

மரியாளைக் குறித்து பார்க்கும் போது அவர் கருவிலே பாவக்கறையில்லாமல் பிறந்தவர். ஆண்டவரின் தூதரால் 'அருள்மிகப் பெற்றவளே' என அழைக்கப்பட்டவர். (லூக் 1:28). அது மட்டுமல்லாமல் ஆண்டவர் இயேசுவையே தன்னுடைய உதிரத்தில் தாங்கிடும் பேறுபெற்ற தாய்,

இறைவனுக்கு உகந்தவராக வாழ்ந்தாள். இத்தகைய பேற்றினால் மரியாள் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என நாம் உறுதியாகச் சொல்லலாம். நற்செய்தியில் ஆண்டவர் இயேசு கூறுவார், "நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர்" (யோவா 12:26). மரியா தலை சிறந்த சீடராக வாழ்ந்ததனால் அவர் இயேசுவுடன் விண்ணக வீட்டில் இருப்பார் என்பது உறுதி.

மரியன்னையின் விண்ணேற்பைக் குறித்து சொல்லப்படும் வரலாறானது, மரியாள் தன்னுடைய கடைசி காலத்தை சியோன் மலையருகிலே இருந்த ஓர் இல்லத்தில் செலவழித்தார். அவருக்கு 60 வயது நடந்துகொண்டிருந்தபோது ஒருநாள் வானதூதர் அவருக்குக் காட்சி கொடுத்து, அவர் எப்படி இறப்பார், இறந்த பிறகு என்ன ஆவார் என்பது குறித்து சொல்லிவிட்டுச் சென்றார்.

அதுபோன்று ஒரு குறிப்பிட்ட நாளில் மரியாள் இறந்தார். அவருடைய இறப்புச் செய்தியைக் கேள்விப்பட்டு. தோமாவைத் தவிர. எல்லா சீடர்களும் அங்கு வந்தார்கள். பின்பு அவர்கள் மரியாளைக் கல்லறையில் அடக்கம் செய்துவிட்டுத் திரும்பிவிட்டார்கள். இதற்குள் மரியாளின் இறப்புச் செய்தி தோமாவின் காதுகளை எட்டியது. அவர் சீடர்களிடம் வந்து, "நான் இறந்த மரியன்னையின் உடலைக் கண்டால் ஒழிய எதையும் நம்பமாட்டேன்" என்று சொன்னார். உடனே சீடர்கள் தோமாவை, மரியாள் அடக்கம் செய்து வைக்கப்பட்ட கல்லறைக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். அங்கு கல்லறையைத் திறந்து பார்த்தபோது, மரியாவின் உடல் இல்லாததைக் கண்டு அவர் உடலோடும், ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை நம்பினார்கள்.



மரியன்னையின் விண்ணேற்புப் பெருவிழாவைக் கொண்டாடும் நாம் இவ்விழா நமக்கு உணர்த்தும் பாடம் என்ன என்று சிந்தித்துப் அதன்படி வாழ்வோம்.

மரியன்னை)க்கு விழா எடுத்து அவரை மகிமைப்படுத்தும் நாம் நம்மோடு வாழும் நம் அன்னையருக்கும் மதிப்பும் மரியாதையும் செலுத்துவோம். ஏனென்றால் பல நேரங்களில் நாம், பல்வேறு இடங்களில் உள்ள அன்னையின் ஆலயங்களுக்குச் சென்று அவரை வழிபடுகிறோம். அவர் முன்பாக உருகி நிற்கின்றோம். ஆனால் நம் அன்னையரை நாம் சரியாகக் கவனிக்கத் தவறிவிடுகின்றோம்.

இது ஒருவிதத்தில் வெளிவேடம்தான். மரியன்னையின் மீது அன்பு வைத்திருக்கும் நாம், நம்மைப் பெற்றெடுத்த அன்னையின்மீது அன்புகொண்டு அவருக்கு தக்க உதவிகளைச் செய்யவேண்டும். அப்போதுதான் நாம் அன்னையின் பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்ளமுடியும்.

விண்ணேற்புப் பெருவிழாவில் மரியன்னைக்கு மகிமை செலுத்துவோம், அதே நேரம் நம்முடைய அன்னையருக்கும் உரிய மதிப்பும் மரியாதையும் செலுத்துவோம். இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்வோம். அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

அருட்பணி
மரிய அந்தோனிராஜ்...

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2022 ஒகஸ்ட் 16 செவ்வாய்க்கிழமை



**தொழுகை நேரம்**

15 முதல் 19 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.16 |
| அஸர் | 03.31 |
| மஃரிப் | 06.26 |
| இஷா | 07.38 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆடி 31

ராகுகாலம் : பகல் : 3.00 - 4.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: சித்த யோகம்

திதி: பஞ்சமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | தனம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | கோபம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | சுகம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

04 ஊழல் குற்றச்சாட்டுகளில் குற்றவாளி

## ஆங் சான் சூகிக்கு மேலும் 6 வருட சிறைத்தண்டனை



மியன்மாரின் முன்னாள் அரச தலைவி ஆங் சான் சூகி, மேலும் 4 ஊழல் குற்றச்சாட்டுகளில் குற்றவாளி என அந்நாட்டு நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது. இதனால் அவரின் சிறைத்தண்டனைக் காலம் மேலும் 6 வருடங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு மூடிய நீதிமன்ற அறையில் நடைபெற்றது. இவ்விசாரணையை பார்வையிட பொதுமக்களுக்கோ ஊடகங்களுக்கோ அனுமதி வழங்கப்படவில்லை. வழக்கு விசாரணை விபரங்களை வெளியிட ஆங் சான் சூகியின் சட்டத்தரணிகளுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரச நிலத்தை சந்தைப் பெறுமதியை விட குறைந்த கட்டணத்துக்கு வாடகைக்கு விட்டமை, காருண்ய சேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டிய நிதியை பயன்படுத்தி வீடொன்றை நிர்மாணித்தமை தொடர்பாக இவ்வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

நான்கு குற்றச்சாட்டுகளில் சூகி குற்றவாளியாக காணப்பட்டார். ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எனினும், 3 குற்றச்சாட்டுகளுக்கான

06

இடைக்கால வரவு செலவுத் திட்டம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 30ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இந்த வருடத்தின் மீதமான நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டம் இம்மாதம் 30 ஆம் திகதி நிதி, திட்டமிடல் அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மேற்படி இடைக்கால வரவுசெலவுத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தின் செலவினம் உள்ளிட்ட 30 ஆம் இலக்க குறைநிரப்பு பிரேரணை கடந்த 9 ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.




அந்த குறைநிரப்பு பிரேரணையில் 3275 பில்லியன் ரூபா அரச செலவினமாகவும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பிலும் அந்த குறைநிரப்பு பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2021 நவம்பர் 07 ஆம் திகதி அப்போது நிதியமைச்சராக பதவி வகித்த பசில் ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க செலவினம் 2796 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தது. அந்த மதிப்பீட்டிற்கு மேலதிகமாக இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில்

06

கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் பயிரிடும்

## உள்ளூர் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொள்ள அரசு அனுமதிக்காது

*அமைச்சர் மஹிந்த அமரவீர*

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

உள்ளூர் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றை பயிரிடும் விவசாயிகள் எவ்வித சிரமங்களையும் எதிர்கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது என விவசாய வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், விவசாயிகளையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பதே அரசாங்கத்தின் பொறுப்பு. அதேபோல், விவசாய உற்பத்திகளுக்கு குறைந்த உத்தரவாத விலையினை பெற்றுக் கொடுத்து நுகர்வோருக்கும் குறைந்த விலையில் விவசாய உணவு உற்பத்திகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.



ஒருபோதும் விவசாய உற்பத்திகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்கு யாருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என தெரிவித்த அமைச்சர், உள்ளூர் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றின் விலைகள் குறைவடைந்தால் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். தற்பொழுது உள்ளூர் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றின் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் இவற்றின் விலைகள் குறைவடையும் சந்தர்ப்பத்தில் விவசாயிகளுக்காக அரசாங்கம் தலையிடும் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் ஆசிய மற்றும் பசுபிக்

## பிரதி பிராந்தியப் பணிப்பாளர் கிறிஸ்டோப் பஹுூட் வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி சந்திப்பு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் கிறிஸ்டோப் பஹுூட், வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியை (12) சந்தித்தார்.



ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக மற்றும் குறிப்பாக கடினமான காலங்களில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிலையான ஆதரவை அமைச்சர் அலி சப்ரி பாராட்டினார். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்துடன் நெருக்கமான ஒத்துழைப்பைத் தொடருவதற்கு இலங்கை ஆர்வமாக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். குறிப்பாக தற்போதைய சவால்களை சமாளிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் தொடர்ச்சியான ஆதரவையும் ஒத்துழைப்பையும் பிரதி பிராந்தியப் பணிப்பாளர் பஹுூட் உறுதிப்படுத்தினார்.

பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் தற்போதைய சவால்களில் இருந்து நிலையான மீட்சியை உறுதி செய்வதற்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்குமான வழிகள் குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர்.




கவிஞர் பொத்துவில் அஸ்மினின் அனைத்து பாடல்களையும் உள்ளடக்கி வெளிவரவுள்ள "திரும்பிப்பார்" படத்தின் முதல் பார்வையினை பிரபல இயக்குனர் அமீர் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்தார். படத்தில் இயக்குனர் ஈ. இப்ராஹீம், தயாரிப்பாளர் கிரி, இசையமைப்பாளர் தேவ் குரு, ஒளிப்பதிவாளர் சக்தி பிரியன் ஆகியோரை காணலாம்.

## நாடளாவிய மருத்துவமனைகளில் மீண்டும் மருந்து தட்டுப்பாடு

மருத்துவ அதிகாரிகள் சங்கம் கவலை

லோரன்ஸ் செல்வநாயகம்

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளிலும் மீண்டும் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் மேற்படி சங்கத்தின் செயலாளர் விசேட மருத்துவர் ஹரித்த அலுத்கே தெரிவிக்கையில்:

மருந்துகளுக்கான தட்டுப்பாடு காரணமாக வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். மருந்து தட்டுப்பாடுகளை தவிர்த்துக் கொள்ளும் வகையில் எதிர்வரும் காலங்களில் அத்தியாவசிய மருந்துகளை தேவைக்கேற்ப களஞ்சியப்படுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் இடம்பெற்றுள்ள ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதே வேளை, மருந்து தட்டுப்பாடு தொடர்பில் அனைத்து வைத்தியசாலைகளிலிருந்தும் அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



ஐ.தே.கவின் கோதமிபுர தொகுதி அமைப்பாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான அல்பிரட் சம்பத்தின் வேண்டுகோளின்பேரில் பொருளாதார சிரமங்களை எதிர்நோக்கும் 800 குடும்பங்களுக்கு 3500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதி வவுச்சர்கள் விநியோகிக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம அதிதி ஜனாதிபதியின் செயலக ஆளணியின் பிரதானி சாகல ரத்நாயக்க பெண்மணியொருவருக்கு வவுச்சர்களை வழங்கி வைப்பதை காணலாம். (படம்: ருசைக் பாரூக்)





இந்தியாவின் 76வது சுதந்திர தினக் கொண்டாட்டம் ஹம்பாந்தோட்டை இந்திய துணைத்தூதரகத்தில் வெகுவிமர்சையாக (15) நடைபெற்றது. துணைத் தூதுவர் (பதில் கடமை) அதுல் அகர்வால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தூதுவர் தேசிய கொடியை ஏற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பதையும் கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

திகதி 14.08.2022
ஞாயிற்றுக்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4847
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,969,300.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 3 0 4 1 4 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 35,496,050.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 877
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,865,520.00
வெற்றி இலக்கினம் G
வெற்றி இலக்கங்கள் 27 55 62 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 121,318,630.40

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3089
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,034,280.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 10 13 69 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 69,282,886.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 156
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,837,340.00
இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 02 42 43 61
விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 3,735,739.60

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1195
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,429,900.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 265,613,078.00
W 07 30 52 54 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2
பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk
Web : www.nlb.lk

## பொலனறுவை மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான எரிபொருள் விநியோகம்

உடனடி நடவடிக்கைக்கு அமைச்சர் பந்துல பணிப்புரை



லோரன்ஸ் செல்வநாயகம்

பொலனறுவை மாவட்டத்தில் பெரும்போக நெற் பயிர்ச்செய்கை மற்றும் அறுவடைக்குத் தேவையான எரிபொருளை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள்

06

## பவுஸரில் எரிபொருள் பெற்று சட்டவிரோதமாக விற்பனை

பொலிஸாரின் சுற்றிவளைப்பில் நால்வர் கைது



ஆனமடுவ தோனிகல பகுதியில் வீட்டு உரிமையாளர் ஒருவரின் தோட்டத்தில் எரிபொருள் பவுஸர் ஒன்று நேற்று (15) காலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய குறித்த பகுதியில் பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது குறித்த பவுஸரில் பெற்றோல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பவுஸரில் 9,200 லீற்றர் பெற்றோலை வேறு லொறி ஒன்றுக்கு ஏற்றும் போது ஆனமடுவ பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம்

06

## ஆங் சான் சூகிக்கு... 03ஆம் பக்கத் தொடர்

தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்கலாம் என அறிவிக்கப்பட்டது. இதன்படி மொத்தமாக மேலும் 6 வருடங்கள் அவர் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். ஏற்கனவே ஆங் சான் சூகிக்கு 11 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ரணில்... 03ஆம் பக்கத் தொடர்

479.4 பில்லியன் அதிகமாகக் காணப்படுகின்றது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகரித்த நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அதிக முதல் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அந்த அமைச்சுக்கு 734.6 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அதிகரித்த நிதியாக பாதுகாப்பு அமைச்சுக்கு 654.3 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பவுஸரில் எரிபொருள்... 03ஆம் பக்கத் தொடர்

பொலிஸாரினால் மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். இருவரும் நுரைச்சோலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

எரிபொருளைக் கொண்டுவந்து சட்டவிரோதமான முறையில் அதிக விலைக்கு விற்பனை செய்ததாக ஆனமடுவ பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது. சந்தேக நபர்கள் 7 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக புத்தளம் பொலிஸார் மற்றும் ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

## 14 நாட்களாக தொடர்ந்தும்...

ஏற்பட்ட மண்சரிவு காரணமாக மண் நிரம்பியுள்ளதால் கடந்த 14 நாட்களாக தொடர்ந்தும் பாதை மூடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன் இந்த மண்மேட்டின் ஊடாக நடந்து பயணிப்பதும் மிகவும் ஆபத்தானதாக காணப்படுகின்றது.

இதனால் இந்த பகுதியில் வசித்து வரும் பாடசாலை மாணவர்கள் உட்பட சுமார் 15,000இற்கும் மேற்பட்ட மக்கள் பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளனர்.

அதுமட்டுமில்லாமல் தொடர்ந்தும் இந்த பகுதிகளில் மண்சரிவு அபாயமும் காணப்படுவதனால் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நீதி விவகாரங்களில்...

நீதித்துறையுடன் அரச நிறுவனங்களின் அதிகாரிகள் நேரடி கடிதப் பரிமாற்றங்களில் ஈடுபடக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் தலைவர்களுக்கு நேற்றைய தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரதம நீதியரசர் உட்பட உயர் நீதிமன்ற நீதிபதிகள், நீதிச் சேவை ஆணைக்குழு அல்லது நீதித்துறை அதிகாரிகளுக்கு நேரடியாக கடிதப் பரிமாற்றங்கள் மேற்கொள்ள வேண்டாம் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## பொலனறுவை மாவட்ட... 03ஆம் பக்கத் தொடர்

மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பொலனறுவை மாவட்டத்தில் கதுருவெல மற்றும் வெளிக்கந்தை ரயில் நிலையங்களோடு இணைந்த பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எண்ணெய்த் தாங்கிகளை விரைவில் மறுசீரமைப்பு செய்து எரிபொருள் களஞ்சியசாலை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு தேவையான எரிபொருளை அதன் மூலம் விரைவில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். எரிபொருள் விநியோகம் தொடர்பில் நேற்றைய தினம் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த பேச்சுவார்த்தையில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, நீர்ப்பாசன, விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவும் கலந்து கொண்டுள்ளனர்.

## கடலுணவுகளை வீடுகளுக்கே...

டக்ளஸ் தேவானந்தாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சேவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பம்பலப்பிட்டி இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மீன் விற்பனை நிலையத்தில் நேற்று (15) சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

அதனடிப்படையில் நேற்று தொடக்கம் 'பிக் மீ' சேவை ஊடாக மேற்படி விற்பனை நிலையங்களில் இருந்து தேவையான கடலுணவுகளை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 9,000 புள்ளிகளை கடந்த...

சுட்டெண் அதிகபட்சமாக 164.04 ஆக பதிவாகியுள்ளது. மேலும், நேற்றைய வர்த்தக நாள் நிறைவில் பங்குச் சந்தையின் மொத்த புரள்வு 5.82 பில்லியன்களாக பதிவாகி உள்ளதாக கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

## 4 மாதங்களில் 34 பேரை...

பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இது இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களின் பதிவாகும். இதேவேளை, 47 காட்டு யானைகளும் உயிரிழந்ததாகவும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

8 மாகாணங்கள் மற்றும் 19 மாவட்டங்களில் உள்ள 131 பிரதேச செயலகப் பிரிவுகளில் யானை மற்றும் மனித மோதல் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டில் உயிரிழந்த 47 காட்டு யானைகளில், 13 யானைகள் துப்பாக்கிச் சூடு காரணமாகவும், மேலும் 17 காட்டு யானைகள் மின்சாரம் தாக்கியும் மரணித்துள்ளன.

கடந்த 3 வருடங்களில் யானைமனித மோதல்கள் அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆள் கடத்தல்காரர்களிடம்...

தலைமையகத்தினால் பொதுமக்களுக்கு விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறில்லை எனில் ஆட் கடத்தல்காரர்களிடம் சிக்கிக்கொள்ளும் அபாயம் உள்ளதால் பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

வெளிநாட்டில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதாக மக்களின் பணத்தை பெற்று ஏமாற்றும் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் குறித்த தகவல்கள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்தநிலையில், அவர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

## டயஸ்போராக்களை சந்தித்துரையாட...

திராவிட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் திராவிட ஈழ மக்கள் சம்மேளனம் ஆகிய ஆறு அமைப்புக்கள் மீதான தடையையும், 316 தனிநபர்களுக்குமான தடையையும் நீக்கியுள்ளமையை நான் வரவேற்கிறேன் என மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

ஆனால், தடை நீக்கம் மாத்திரம் அவர்களை திருப்திப்படுத்தப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 52 பில்லியன் டொலர் கடன்சுமை, நாட்டை நடத்த மாதாந்த 500 மில்லியன் டொலர் தேவை ஆகிய வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்துள்ள அனைத்து தமிழ், சிங்கள மக்களின் ஒத்துழைப்புகளையும் நாம் நாட வேண்டும்.

இதற்காக கால தாமதம் செய்யாமல், இந்நாட்டின் தேசிய ஐக்கியம் மற்றும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலும், ஊழலற்ற நிதி நிர்வாகம் தொடர்பிலும் ஒரு குறைந்தபட்ச பொது கோட்பாடுகளை இலங்கை அரசு புலம்பெயர் இலங்கையர்களை நோக்கி அரசாங்கத்தின் உத்தரவாதமாக அறிவிக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் தமிழ் அமைப்புகள் மட்டுமல்ல, இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்துள்ள சிங்கள மற்றும் அனைத்து மக்களது அமைப்புகளுடனும் சென்று உரையாட நான் தயாராக இருக்கின்றேன்.

ஒரு பக்கம் தமிழர் என்ற முறையிலும், மறுபுறம் தெற்கில் சிங்கள மக்கள் வாழும் கொழும்பு மாவட்ட எம்பி என்ற முறையிலும் நான் இந்த பாத்திரத்தை வகிப்பது பொருத்தமானது என நம்புகிறேன்.

அரசில் அமைச்சு பதவிகளை பெறுவதை விட இதுதான் பிரயோசனமானது எனவும் நான் நம்புகிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

## இரு நாடுகளுக்கும் தனித்தனி...

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு நட்புறவுக்கு 75 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை பலப்படுத்துவதற்கான வாய்ப்பு இதுவெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை இந்திய தொடர்புகளுக்கிடையில் மட்டுமின்றி பிராந்தியம் மற்றும் உலகளாவிய ரீதியிலான பொது நெருக்கடிகளை நாம் இனம் கண்டுள்ள நிலையில் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேவேளை, இராமாயணமானது இலங்கை மற்றும் இந்தியா என இரு நாடுகளுக்கும் பொதுவான கலாசார முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சிறு வித்தியாசங்கள் சில மட்டுமே காணப்படுவதுடன் இந்தியா இராமரை வீரனாக கருதும் அதேவேளை இலங்கையானது இராமரையும் இராவணனையும் வீரர்களாக போற்றுகிறது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ள ட்ரோனியர் INDO 228 ரக விமான கையளிப்பிற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்றது.

இந்த உத்தியோகபூர்வ நிகழ்வின் போது இந்தியாவினால் இலங்கைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ள ட்ரோனியர் ரக விமானத்தை இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

இலங்கைக்கு இந்தியாவுக்கும் பொது கணிதமே உள்ளது. இலங்கை இந்தியாவுடன் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றது. வரலாறு இந்தியாவையும் இலங்கையையும் ஒன்று சேர்த்திருப்பதால் எதிர்காலத்திலும் தொடர்ந்து இணைந்து பயணிக்க வேண்டும். அத்துடன் பிராந்திய மற்றும் உலக நாடுகளின் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம்.

இந்து சமுத்திரத்தில் உள்ள சிறிய நாடான இலங்கை உலக வல்லரசாக முன்னேறி வருகின்ற இந்தியாவின் வகிபாகத்தை அவதானித்துக் கொண்டிருப்பதுடன் புரிந்துணர்வுடன் செயற்படும் திறன் அரசாங்கத்திற்கு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

2018 ஜனவரி மாதம் 9 ஆம் திகதி புதுடில்லியில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெற்ற இருதரப்பு பாதுகாப்புப் பேச்சுவார்த்தையின் போது இலங்கையின் கடல்சார் கண்காணிப்புத் திறனை மேம்படுத்துவதற்காக இந்தியாவிலிருந்து இரண்டு டோனியர் ரக கடல்சார் கண்காணிப்பு விமானங்களை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை அரசின் கோரிக்கையை ஏற்று இந்திய கடற்படைக்கு சொந்தமான டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானம் ஒன்றை முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இலவசமாக வழங்க இந்திய அரசு ஒப்புக்கொண்டது. புதிய விமானம் தயாரிக்க சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும் என்பதால், அந்த முதல் இரண்டு ஆண்டுகளின் முடிவில் புதிய டோனியர் 228 கடல்சார் ரோந்து விமானத்தை இலவசமாக வழங்க இந்திய அரசு விருப்பம் தெரிவித்ததுடன் பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் இலங்கை அரசுக்கு மற்றொரு புதிய விமானத்தை இந்தியா வழங்கவுள்ளது.

அதனைக் குறிக்கும் வகையில் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனகே ஜனாதிபதிக்கு விசேட நினைவுப் பரிசையும் வழங்கினார்.

நேற்றைய இந் நிகழ்வில் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, இராணுவத் தளபதி ஜெனரல் விகும் லியனகே உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## தடை நீக்கத்திற்கு...

தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களின் பெயர்களையும் கறுப்புப் பட்டியலில் இருந்து இலங்கை அரசு நீக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிபந்தனைகளின் 1373 இன் கீழ், இலங்கைக்குள் 18 அமைப்புக்களுக்கும், 577 தனிநபர்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசு தடை விதித்தது. இந்நிலையில், இலங்கைக்குள் தடைசெய்யப்பட்ட உலகத் தமிழர் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ், ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், உலக திராவிட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் திராவிட ஈழ மக்கள் சம்மேளனம் ஆகிய 6 அமைப்புக்கள் மீதான தடையும், 316 தனிநபர்களுக்குமான தடையும் நீக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

# இரா. சம்பந்தன்

"இது நல்லதொரு விடயம். அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்கின்றோம். பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கையின் மீள் எழுச்சிக்குப் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியம். இதனை உணர்ந்து சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளினதும், தனிநபர்களினதும் தடையை இலங்கை அரசு நீக்கியுள்ளது.

நாட்டின் நலன் கருதி அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கையை வரவேற்கின்றோம். அதேவேளை, தொடர்ந்தும் தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பிலும் ரணில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களுடன் இலங்கை அரசு நெருக்கமாகப் பேசி நாட்டுக்காக அவர்களின் உதவிகளைப் பெற வேண்டும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

# மாவை சேனாதிராஜா

பொருளாதார ரீதியாக உதவிகளைப் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளார் என்று நாங்கள் எண்ணலாம். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையை நாங்கள் வரவேற்கின்றோம்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை ரணில் அரசு வழங்க முன்வந்தால்தான் அவர்கள் எதிர்பார்க்கின்ற புலம்பெயர் தமிழர்களுடைய முதலீடுகளும், பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான உதவிகளும் கிடைக்கும் என்று கருத வேண்டும். அதேவேளை, ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது தொடரும் தடையையும் நீக்க ஜனாதிபதி முன்வரவேண்டும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

# செல்வம் அடைக்கலநாதன்

"சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளமையை வரவேற்கின்றோம்.

இன்னும் பல புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தனிநபர்களின் பெயர்களும் தடைசெய்யப்பட்ட பட்டியலிலேயே காணப்படுகின்றன. அந்தத் தடையையும் நீக்குமாறு நாம் ரணில் அரசிடம் கோருகின்றோம்.

முதலீடு செய்யத் தயாராக இருக்கும் புலம்பெயர் உறவுகள் அச்சமின்றி தங்கள் முதலீடுகளை செய்வதற்கு இந்தத் தடையை நீக்குவது அவசியமாகும். இதைக் கருத்தில்கொண்டு ஏனைய புலம்பெயர் அமைப்புகளையும் தனிநபர்களின் பெயர்களையும் தடைப்பட்டியலில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றோம்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

# தர்மலிங்கம் சித்தார்த்தன்

"புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் பலர் மீதான தடையை கடந்த நல்லாட்சி அரசு நீக்கியிருந்தது. பின்னர் ஆட்சிக்கு வந்த கோட்டாபய அரசு, மீண்டும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது தடையை விதித்திருந்தது.

தற்போது ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தத் தடையை நீக்கியுள்ளார். எல்லோருக்கும் இல்லாவிடினும் சில முக்கிய அமைப்புக்கள் மற்றும் முக்கிய நபர்கள் சிலர் மீதான தடையை ரணில் அரசு நீக்கியுள்ளது. இதை நாம் வரவேற்கின்றோம்.

சில அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதான தடை இன்னமும் தொடர்கின்றது. இதனை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களுடைய முதலீடுகளும், உதவிகளும் இலங்கைக்கு வர வேண்டும் என்று ரணில் அரசு எதிர்பார்க்கின்றது. ஆகவே, புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்கள் அல்லது அங்கு அமைப்புக்களூடாக மக்களுடன் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள் தடையில் இருந்தால் தாம் எதிர்பார்க்கும் காரியங்கள் நடக்காது என்ற காரணத்தால் இந்தத் தடையை ரணில் அரசு நீக்கியுள்ளது" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

## தானிஸ் அலிக்கு பிணை...

தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தானிஸ் அலிக்கு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான குறித்த வழக்கு நேற்று (15) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவருக்கு இவ்வாறு பிணை வழங்கி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## கச்சதீவை மீட்பதே தமிழக...

75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (14) விசைப் படகில் பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர்கள் கடல் பயணம் சென்றனர்.

அதன் பின்னர் ஊடங்களுக்கு கருத்து தெரிவித்த அண்ணாமலை, இலங்கைக்கு அருகில் ராமேஸ்வரம் பகுதி உள்ளதால் அந்நாட்டு கடற்படையின் தாக்குதல், சிறைபிடிப்பு சம்பவங்களால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2017/ 2018 இல் இலங்கை சிறையில் இருந்த மீனவர்கள், படகுகளை பிரதமர் மோடி மீட்டிக்கொடுத்தார். தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள 60 படகுகளை மீட்க பிரதமரிடம் வலியுறுத்துவோம்.

1974 இல் பிரதமராக இருந்த இந்திரா காந்தி தமது தவறான அணுகுமுறையால் கச்சத்தீவை இலங்கைக்கு தாரைவார்த்துக் கொடுத்தார்.

## சுற்றறிக்கையின் விதிமுறைகளை...

நிறுவனங்களின் தலைவர்களும் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதியின்

செயலாளர் தெரிவித்துள்ளார்.

அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க நேற்று (15) கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அதற்கமைய, மேற்படி சுற்று நிருபங்கள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் எனவும், இதன் கீழ் மேற்கொள்ளப்படும் பொதுச் செலவினங்களுக்கு உரிய அமைச்சுச் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும் எனவும் கடிதத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மாநகர சபை வளாகத்தில்...

ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபை மேயர் ரோஸி சேனாநாயக்கவின் பணிப்புரைக்கு அமைவாக இந்த பயிர்ச் செய்கையை முன்னெடுப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயிர்ச் செய்கை நடுவதற்காக கொழும்பு மாநகர சபை ஊழியர்களால் நிலத்தை பதப்படுத்தி பயிர்ச் செய்கைக்கு தயார்ப்படுத்தும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில், நாட்டு மக்கள் அனைவரும் முடிந்தளவு சிறுதோட்டப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுவதற்கு தேவையான வசதிகள் அரசாங்கத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பயனை மக்கள் பெற்றுக்கொள்ளும்படி பொது மக்களை அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தப் பயிர்ச் செய்கைக்கு தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் பெறுவதற்கு பொது மக்களுக்கு முடியும். இதன் மூலம் மக்கள் தங்களுக்குத் தேவையான தக்காளி, பூசிணிக்காய், கத்தரிக்காய், மிளகாய் உள்ளிட்ட பயிர்ச் செய்கைகளில் ஈடுபடும்போது மேலதிகமாக வருமானம் ஈட்ட முடியும் என்பதுடன், தங்களது செலவுகளையும் குறைத்துக் கொள்ள முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அரசியல் கட்சிகளுக்கு தேர்தல்...

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான பாராளுமன்ற விசேட குழுவின் முன்மொழிவுகள் தொடர்பில் கருத்துக்களை கேட்டறிவதற்கும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள அரசியல் கட்சிகளின் யோசனைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் எதிர்காலத்தில் குறித்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடுவதற்குமே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத சுமார் 50 அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன. தேர்தல் சட்டத்திருத்தம் தொடர்பான பாராளுமன்ற விசேட குழுவின் முன்மொழிவுகள் தொடர்பில் அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழு, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 15 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## CDM இயந்திரத்தில் காத்திருந்த...

லட்சத்திற்கும் அதிகமாக பணம் கிடைத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. எம்.எம்.தஹநாயக்க என்ற நபர் தனது மகனுடன் பணம் வைப்பு செய்ய சென்ற சந்தர்ப்பத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏற்கனவே பணம் வைப்பு செய்ய சென்ற நபர் அதனை உரிய முறையில் வைப்புச் செய்யாமையினால் பணம் இயந்திரத்திலேயே சிக்கியிருந்தது. இந்த நிலையில் அடுத்ததாக பணம் வைப்புச் செய்ய சென்ற எம்.எம்.தஹநாயக்க இயந்திரத்தை அழுத்தும் போதும் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பணம் கிடைத்துள்ளது. அவர் அந்த பணத்தை வெளியே எடுத்துவிட்டு தனது பணத்தை வைப்பிட்டுள்ளார்.

பின்னர் அந்த வங்கி அமைந்துள்ள பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். பொலிஸார் உரிமையாளரிடம் இந்த பணத்தை ஒப்படைத்துள்ளனர். மற்றவர்களின் பணம் எங்களுக்கு எதற்கு நம்பிக்கையுடன் செயற்பட்டால் நாமும் வெற்றி பெறலாம் என தஹநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் பணத்திற்கு சொந்தமான உரிமையாளர் மிகவும் மகிழ்ச்சியடைந்ததுடன், அந்த நபரின் நேர்மைக்கு பாராட்டியுள்ளார்.

## மடுமாதா ஆவணித் திருவிழா...

சிறப்பாக நடைபெற்றது.

நேற்றுக் காலை 6.15 மணி அளவில் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில்,அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்ராடி ஆண்டகை, கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயர் மேதகு அன்ரன் ரஞ்சித் பிள்ளை நாயகம் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலி யாக ஒப்புக்கொடுத்தனர்.

இந்த நிலையில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் அன்னையின் ஆசீர்வாதத்தை வேண்டி மடு திருத்தலத்திற்கு வருகை தந்தனர்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம் பெற்றதோடு மடு அன்னையின் ஆசி பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

குறித்த திருவிழா திருப்பலியில் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் , மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் பி.கிறிஸ்து நாயகம் அடிகளார், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், அகில இலங்கை கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஸ்தாபகர் அதி வணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோ, அரசியல் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு மடு அன்னையின் ஆசி பெற்றனர்.

கடந்த வருடம் நாட்டில் ஏற்பட்டிருந்த கோவிட் தொற்று காரணமாக ஆலயத்திற்கு செல்ல பக்தர்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இந்த வருடம் அதிகளவான மக்கள் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்ய நடை பயணம் மேற்கொண்டு வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நாளாந்த மின்வெட்டு நேரம்...

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நேற்றைய தினம் முதல் 3 மணித்தியாலங்களுக்கு தினசரி மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

எவ்வாறாயினும், நேற்றும் இன்றும் ஒரு மணி நேரமும் 20 நிமிடங்கள் மட்டுமே மின்வெட்டு அமுலாகும் என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு (14) அறிவித்தது.

எனினும், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் செயலிழப்பு மின்வெட்டு நேர மாற்றத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது.

நேற்று காலை நுரைச்சோலை அனல் மின் நிலையம் திடீரென பழுதடைந்ததையடுத்து, நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் முதலாவது தொகுதி செயலிழந்துள்ளதாகவும், தொழில்நுட்ப ஊழியர்கள் தற்போது கோளாறை கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை, மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது தொகுதியில் திட்டமிடப்பட்ட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும்,அனல்மின் நிலையத்தின் மூன்றாவது தொகுதி தொடர்ந்து இயங்குவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும், மின்சார விநியோகத்தை நிர்வகிக்க மேற்கு முனையம் மற்றும் பிற எரிபொருள் மின்நிலையங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் எரிசக்தி அமைச்சர் கூறினார்.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 31ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 15

## குறள் தரும் சிந்தனை



இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது

தனக்கு அழிவே தருவதாக இருந்தாலும், அதை எண்ணிப் பயந்து விடாமல் உறுதியுடன் கடமை யாற்றுகின்றவனே தன்னுடைய தலைவனுக்கு நம்பிக்கையான தூதுனாவான்.

# இலங்கைத் தாயகம் மீது கரிசனை கொண்டுள்ள புலம்பெயர் தமிழர்கள்

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர் தமிழர்களின் ஒத்தாசையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆலோசனை நீண்ட காலமாகவே முன்வைக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் பாரிய தொழில்துறைகளில் முதலீடு மேற்கொள்வதற்கான வல்லமையை புலம்பெயர் தமிழர்கள் கொண்டிருப்பதனால், அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பலர் நீண்ட காலமாக குரலெழுப்பி வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக கடந்தகால அரசாங்கங்கள் கவனம் செலுத்தி வந்திருக்கின்றன. ஆனாலும் இந்த விடயத்தை செயற்படுத்துவதில் எந்தவொரு முன்னேற்றமுமே எட்டப்படவில்லை. புலம்பெயர் தமிழர்களின் தொழில் முதலீடுகள் இலங்கையில் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையானது காலத்துக்குக் காலம் தோன்றுவதும், பின்னர் அது பலனில்லாமல் போவதும் வழமையாகி விட்டது.

இலங்கையில் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை ஆரம்பிப்பதென்பது சாத்தியமில்லாமல் போனதற்கான காரணிகள் எவையென்பது புரியாத விடயமல்ல. புலம்பெயர் தமிழர்களின் தொழில் முதலீடுகளை பெரும்பான்மையினரில் ஒரு தரப்பினர் இனவாதக்கண் கொண்டு நோக்குகின்றனர். மற்றொரு தரப்பினர் இந்த விடயத்தை இனவாதமாகச் சித்திரித்து தங்களது அரசியலுக்கான வாய்ப்பாகப் பயன்படுத்த முற்படுகின்றனர். இவைதான் அதற்கான காரணிகளாகும்.

ஆனால் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை இனவாதமாக நோக்குவோரால் எமது நாட்டின் பொருளாதாரத்துக்கே பாதிப்பு ஏற்படுகின்றதென்பதுதான் உண்மை. புலம்பெயர் தமிழர்களுக்கு இதனால் பாதிப்பு ஒருபோதும் ஏற்படப் போவதில்லை. ஆனால் அவர்களது முதலீட்டு வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள முடியாததால் இலங்கைத் தேசத்துக்கே பாதிப்பு ஏற்படுகின்றது. இலங்கையர்கள் பலருக்கு தொழில்வாய்ப்புக் கிடைப்பதற்கான நன்மையும் இல்லாமல் போகின்றது.

புலம்பெயர் தமிழர்கள் என்றதும் அவர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக பிரிவினைக்கு ஆதரவானோர் என்றுதான் இலங்கையிலுள்ள பெரும்பாலானவர்கள் நினைத்துக் கொள்கின்றனர். மேற்குநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள் அனைவரும் நாட்டின் பிரிவினையை நோக்கமாகக் கொண்டே செயற்படுகின்றனர் என்றுதான் இலங்கையிலுள்ள பெரும்பான்மை சமூகத்தில் பலர் இன்னமும் எண்ணிக் கொள்கின்றனர். அதன் காரணமாகவே புலம்பெயர் தமிழர்கள் மீதான சந்தேகப் பார்வையும், வெறுப்பும் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

இந்தச் சந்தேகத்தையும் அச்சத்தையும் மக்களுக்கு ஊட்டியவர்கள் பெரும்பான்மையின அரசியல்வாதிகளில் ஒரு தரப்பினர்தான் என்பது தெரிந்த விடயம். அவர்கள் நாட்டின் பொருளாதார நலனிலும், இனஐக்கியத்திலும் அக்கறை கொள்ளாதவர்களாவர். அவர்கள் தங்களது அரசியல் ஆதாயத்தை மாத்திரமே கருதி செயற்பட்டவர்களாவர். நாட்டில் இனநல்லிணக்கம் சீர்குலைந்து போனதற்கும், பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததற்கும் அவ்வாறான அரசியல்வாதிகளே காரணகர்த்தாக்களாவர்.

புலம்பெயர்ந்து வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள் வேறெந்த தேசத்தையும் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்களும் முன்னொரு காலத்தில் இலங்கைக் குடிமக்களாக இங்கு வாழ்ந்தவர்கள்தான். 1983 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் இடம்பெற்ற தமிழர்களுக்கெதிரான கொடிய வன்செயல்களாலும், அதன் பின்னர் உருவெடுத்த உள்நாட்டு யுத்தத்தினாலும் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலிருந்தும் படிப்படியாக புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களே இன்று தாங்கள் தஞ்சமடைந்த நாடுகளில் பலம் வாய்ந்த சமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மேற்கு நாடுகளில் பொருளாதார பலம் மிகுந்தவர்களாகவும், அந்நாடுகளின் அரசியலையே தீர்மானிக்கக் கூடியவர்களாகவும் அவர்கள் உச்சநிலைக்கு இன்று சென்றுள்ளனர். கனடா, அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி உட்பட மேற்கு நாடுகள் பலவற்றில் அரசியல் உயர் பதவிகளை இலங்கையர்கள் பலர் இன்று வகித்து வருகின்றனர். நாட்டை நிர்வகிக்கின்ற அரசாங்க உயர்பதவிகள் பலவற்றில் இலங்கைத் தமிழர்கள் பலர் உள்ளனர்.

மேற்குலகின் பல நாடுகள் அங்கு வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களின் வகிபாகத்தை மனமுவந்து ஏற்றுக் கொண்டுள்ளன. அவர்களது கடின உழைப்பு, ஆற்றல், அறிவுத்திறன், ஆளுமை போன்றனவே இதற்கெல்லாம் காரணங்களாகும். ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இலங்கைப் புலம்பெயர் தமிழர்கள் பெருநிறுவனங்கள் பலவற்றையே நடத்தி வருகின்றனர். அந்த நாடுகளைப் பூர்வீகமாகக் கொண்ட மக்களுக்கே தொழில்வாய்ப்பு வழங்குபவர்களாக புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர். தாய்நாட்டை நேசிப்பவர்களாகவும்அவர்கள் உள்ளனர்.

அதேசமயம் அந்நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர் தமிழர்களில் ஒரு தரப்பினர் அர்த்தமெதுவும் இல்லாத நிலையில் இன்னுமே பிரிவினைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துக் கொண்டு வருவதும் தெரியாத விடயமல்ல. ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் ஒழிக்கப்பட்டுப் போன புலிகள் இயக்கத்தின் பெயரைச் சொல்லிக் காலத்தைக் கடத்துகின்ற பிரகிருதிகள் பலர் அங்கு உள்ளனர். அத்தகையோர் இலங்கையில் நல்லிணக்கத்தை விரும்பாதவர்களாவர்.

அவ்வாறான பிரிவினை ஆதரவாளர்களைப் பற்றி இலங்கை மக்கள் அக்கறை கொள்ள வேண்டிய அவசியமில்லை. தாய்நாட்டை உண்மையில் நேசிக்கின்ற புலம்பெயர் தமிழர்களின் ஆதரவே இலங்கைக்குத் தேவை. அவர்களது தொழில் முதலீடுகளை இலங்கையில் ஏற்படுத்திக் கொள்வதிலேயே கவனம் செலுத்தப்பட வேண்டும். தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்றுள்ள போதிலும், அவர்களும் நம் நாட்டு மக்கள்தான் என்ற யதார்த்தமான சிந்தனையே அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம்

மட்டக்களப்பு, பாலமீன்மடு திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழாவின் தீர்த்தோற்சவம் கடந்த வியாழக்கிழமை பூரணை தினத்தன்று பாலமீன்மடு கடலில் இடம்பெற்றது.

அமரத்துவமடைந்த நல்லதம்பி சடையப்பா சுவாமிகளால் 71 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட மேற்படி ஆலயத்தின் இவ்வாண்டுக்கான உற்சம் கடந்த 02.08.2022 செவ்வாய்க்கிழமை கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் உற்சவம் நடைபெற்று சமுத்திர நீராடலுடன் நிறைவு பெற்றது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ அ.பிரதீபன் சர்மா தலைமையில் உதவிக்குரு சிவஸ்ரீ ஷஹாப்தன் சர்மா ஆகியோர் கிரியைகளை நடத்தினர். பாலமீன்மடு திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலயத்தின் ஸ்தாபகர் சடையப்பா சுவாமி 16.5 அடி நீளமான சடையைக் கொண்டிருந்ததாகவும், இறப்பதற்கு முன்பாக 1983 இல் காடு மண்டிக் கிடந்த திராய்மடு கிராமத்தில் வசித்து வந்த மக்கள் 'நாம் காட்டுக்குள்ளே வசிக்கின்றோம்' என ஆலயத்தில் வைத்துக் கூறியபோது அவர் சடுதியாக 'இவ்விடம் நகரமாக மாறும்' என அருள்வாக்குக் கூறியதாகவும் சொல்லப்படுகின்றது. அதற்கமைவாக குறித்த பிரதேசத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மீள்குடியேற்றக் கிராமம், மதத்தலங்கள், அரச காரியாலயங்களான மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் புதிய கட்டடம், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் புதிய கட்டடம், 40 ஏக்கர் கொண்ட முதலீட்டாளர்களின் தொழில்பேட்டை தொழில்சார் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, விரைவில் மட்டக்களப்பு சிறைச்சாலையின் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







சிவம் பாக்கியநாதன்
(மட்டக்களப்பு விசேட நிருபர்)

# அரசியல் மறுசீரமைப்பானது தமிழ் மக்களை இலக்காக கொண்டிருக்க வேண்டும்!

அரசியல் மறுசீரமைப்பானது முழுமையாக தமிழ் மக்களை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றம், பாராளுமன்ற ஆட்சிமுறை குறித்ததாக இருந்தாலும் தமிழர்களுடைய பிரச்சினைக்கான தீர்வை நோக்கியதாக அரசியல் மறுசீரமைப்பானது அமைய வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா) தெரிவித்துள்ளார்.

அதற்கு மாறாக பெரும்பான்மை சமூகத்தையும், பௌத்த தேசியவாதத்தையும், மேலாண்மையையும் இலக்காகக் கொண்டதாக இருக்குமானால் நீங்கள் எதிர்பார்க்கின்ற தேசிய இணக்கப்பாடு சாத்தியமற்றதாகவே இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

9வது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை வைபவரீதியாக ஜனாதிபதி ஆரம்பித்து வைத்து ஆற்றிய உரைமீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் குறிப்பிட்டதாவது:

"இப்போது சர்வ கட்சி அரசாங்கத்திடம் தமிழர்களின் கோரிக்கைகளில் முக்கியமானதாக இருப்பது நில அபகரிப்பை நிறுத்த வேண்டும் என்பதாகும். அத்துடன் அபகரித்த நிலத்தை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் பௌத்த விகாரைகள் அமைப்பதை நிறுத்த வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். தமிழரின் பாரம்பரிய தாயகப் பிரதேசமான வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவத்தினர் குறைக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் சரியான விசாரணை நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்படுதல் வேண்டும். இந்த நாட்டுக்கு சர்வகட்சி ஆட்சியே தேவை. இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டே நடந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்துக்கு இதுவரை தீர்வில்லை. கடந்த கால வரலாறுகளை நாங்கள் திரும்பிப் பார்ப்போமானால், இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டே தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக பார்க்கப்பட்டார்கள். அவர்களுக்கான அநீதியும் நடைபெற்றுக் கொண்டு வந்தது. சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே 49 இல் டி.எஸ்.சேனாநாயக்கா அவர்கள் கிழக்கு மாகாணத்தில் குடியேற்றத்தை கல்லோயாத் திட்டத்தின் ஊடாக முயற்சித்திருந்தார். அதனை நடைமுறைப்படுத்தினார்.

1921ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் இருந்த சிங்கள மக்களின் சனத்தொகை 0.5வீதம் ஆனால் இன்று 24 வீதமாக உயர்ந்ததற்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக இருந்தது மட்டுமல்ல 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டதுமாகும்.

புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதென்பது தமிழர்களின் பிரச்சினைக்குரிய நியாயமான தீர்வு முன்வைக்கப்பட்ட பின்னரே சாத்தியமாகும் என்பது சிங்களத் தலைவர்கள் அனைவருக்கும் புரிய வேண்டும். இல்லாது போனால் உங்களுடைய புலம்பெயர் தமிழர்களை உதவிக்கு அழைக்கும் முயற்சி பயனற்றதாகவே ஆகும்.

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியைச் சீர்செய்வதற்கான பல்வேறு வழிகளை ஜனாதிபதி அவருடைய உரையில் முன்வைத்திருக்கிறார்.

அவை அனைத்துமே நடைமுறைக்கு வருமானால் பாராட்டப்படத்தக்கதாக இருக்கும். திட்டங்கள் அனைத்து நடைமுறைப்படுத்தப்படும் போது மக்கள் நிம்மதியடைய வேண்டும். மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதே எம்முடைய எதிர்பார்ப்பாகும்.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் விவசாயம், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு என உற்பத்தித் துறைகள் காணப்படுகின்றன. வடக்கைப் பொறுத்தவரையில் கிழங்கு உற்பத்தி, வெங்காய உற்பத்தி சிறப்பாக நடைபெறுகிறது. அங்கு அறுவடை நடைபெறுகின்றவேளை வெளிநாடுகளிலிருந்து அதே உற்பத்திகளை இறக்குமதி செய்வதும், எமது விவசாயிகளுக்கான உரம் வழங்கல் பொலநறுவை, அனுராதபுர பிரதேசங்களின் நேர அட்டவணைக்கு ஏற்ப நடைபெறுவதும், அவர்களுடைய அறுவடைக் காலத்துக்கு ஏற்ப நெல் சந்தைப்படுத்தல் சபை நெல்லைக் கொள்வனவு செய்தலும் விலை நிர்ணயம் நடைபெறுவதும் பாரபட்சமான விடயமாகும். இதில் மாற்றம் செய்யப்பட்டாக வேண்டும்.

இந்தியா இலங்கைக்கு பொருளாதார உதவியை வழங்கியிருந்தது. ஏற்கனவே கடன் வசதிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும், பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது கிரடிற் லைன் மூலமாக அதிகமான உதவிகளைச் செய்திருந்தார்கள். எரிபொருள் உதவி மற்றும் மருந்துப் பொருள்களை வழங்கியிருந்தார்கள். ஆனால் இன்று என்ன நடக்கின்றது?

பூகோள அரசியலில் இலங்கையை பகடைக்காயாக சீனா பயன்படுத்துகின்றது. வர இருக்கும் கப்பல் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது என்று இந்தியா கூறியிருக்கின்றது.

அயல்நாடான இந்தியா அனைத்து நேரங்களிலும் எமக்கு ஆதரவாக இருக்கின்ற போது நாங்கள் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமே தவிர, இந்தியாவை எவ்வேளைகளிலும் பகைத்துக் கொள்ளக் கூடாது".



தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம்

# முச்சக்கரவண்டியை நாடுகின்ற பயணிகள் தொகையில் வீழ்ச்சி!

குறைந்த செலவில் பயணிக்க வேண்டுமானால் முச்சக்கர வண்டியில் பயணிக்க வேண்டும் என்பதெல்லாம் அக்காலம். முச்சக்கரவண்டியில் பயணம் செய்வதென்பதே இக்காலத்தில் ஒரு தடவைக்கு பல தடவை யோசிக்க வேண்டிய விடயமாகிப் போயுள்ளது.

எத்தகைய வீதியிலும், குறுகலான பாதைகளிலும் செல்லக் கூடியதொரு வாகனம் முச்சக்கரவண்டி ஆகும். கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களில் புதிய இடங்களுக்குச் செல்ல வேண்டுமானால் முச்சக்கர வண்டி ஓட்டுநரிடம் வழி கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

அந்தளவுக்கு வீதிகளையும், அலுவலகங்களையும், பிரதேசங்களையும் நன்கு அறிந்து, தெரிந்தவர்களாக முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் உள்ளனர்.

## ஏராளமானோரின் வருமானம் எதிர்காலத்தில் கேள்விக்குறி!

முன்னரெல்லாம் குறைந்த முதலீட்டில் கூடிய வருமானத்தை எதிர்பார்க்கும் ஒருவர் தெரிவு செய்யும் தொழில் முச்சக்கர வண்டித்துறையாகத்தான் இருக்கும்.

ஆனால், இன்று அந்த நிலைமை மாறி விட்டது. முச்சக்கர வண்டிப் பயணங்கள் அதிக செலவுமிக்கதாக மாறிவிட்டன. இதனால், முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்துபவர்களின் தொகை அண்மைக் காலத்தில் கணிசமானளவு வீழ்ச்சி கண்டுள்ளது.

இதன் காரணமாக, முச்சக்கரவண்டி ஓட்டுநர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், முச்சக்கரவண்டித் தொழிலின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் நிலையேற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் பயணிகளிடமிருந்து அதிக கட்டணம் அறவிடுவதே, தற்காலத்தில் மக்கள் முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்துவதிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கு பிரதான காரணமாகும்.

எரிபொருள் விலையேற்றத்தையடுத்து, நாடளாவிய ரீதியில் முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதே சமயம் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்கள் உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதிகளில் முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் கொழும்பு போன்ற நகரங்களில் அறிவிடப்படும் கட்டணத்தை விடவும் அதிக கட்டணம் அறவிடுவதாக பயணிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

நிர்ணய கட்டணமின்றி, சிறிய தூரத்திற்கும் அவர்கள் அதிக கட்டணம் கோருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். முச்சக்கர வண்டிகளின் ஓட்டுனர்கள் தகுதி, தராதரம் பாராது பயணிகளுடன் முரண்பட்டுக் கொள்வதையும், வாக்குவாதத்தில் ஈடுபடுவதையும் பல இடங்களில் காண முடிகின்றது. கௌரவமான பிரஜைகள் பலர் முச்சக்கரவண்டி ஓட்டுநர்களால் அவமரியாதைக்கு உட்படுத்தப்படுகின்ற சம்பங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு இதுவரை டெக்ஸி கட்டண மீற்றர் பொருத்தப்படவில்லை. இதனால் நினைத்த மாத்திரத்தில் அதிக கட்டணம் அறிவிடுவதாக பயணிகள் கவலைப்படுகின்றனர்.

இதன் காரணமாக மக்கள் தற்காலத்தில் முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்துவதிலிருந்து பெரிதும் தவிர்ந்து கொள்கின்றனர். மாற்றீடாக பொதுப் போக்குவரத்து, துவிச்சக்கர வண்டி அல்லது கால்நடைப் பயணத்தை மக்கள் பெரிதும் விரும்பி வருகின்றனர்.

குறித்த சில முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் இழைக்கும் தவறுகளினால், நல்லுள்ளம் படைத்த முச்சக்கரவண்டித் தொழிலாளர்களின் நற்பெயரும் பாதிக்கப்படுகின்றது. தங்களது தொழிலின் எதிர்காலம் குறித்த அச்சம் ஏற்பட்டுள்ளதாக முச்சக்கர வண்டி சாரதியொருவர் கவலை தெரிவித்தார். தவணைமுறை கொடுப்பனவு அல்லது வங்கிக் கடனுக்கு முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்தவர்கள் அதிகமுள்ளனர். அது மாத்திரமின்றி நிரந்தர உத்தியோகம் அல்லது வியாபாரத் தொழில் செய்பவர்கள் தங்களது மேலதிக வருமானத்திற்காக பகுதிநேரத் தொழிலாகவும் முச்சக்கரவண்டித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறானவர்களின் எதிர்காலமும் கேள்விக்குள்ளாகியுள்ளது.

இவைதவிர முச்சக்கரவண்டித் தொழிலை ஆரம்பம் முதல் இன்றுவரை நேர்மையாகத் செய்பவர்களும் சமூகத்தில் இல்லாமலில்லை.

தங்களுக்கென்று ஒரு வாடிக்கையாளர் கூட்டத்தை வைத்துக் கொண்டு நீதி, நியாயமாகத் தொழில் செய்து, அன்றாடம் தங்களது குடும்பத்தை அவர்கள் கவனித்து வருகின்றனர். ஆனால் ஓட்டோ சாரதிகள் சிலரின் அருவருக்கத்தக்க செயற்பாடுகளினால் நேர்மையானவர்களும் கவலையுமடைகின்றனர்.

முச்சக்கர வண்டிகளுக்கு டெக்ஸி மீற்றர் பொருத்தப்படுவது ஏற்கனவே கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, முச்சக்கர வண்டியில் பயணம் செய்பவர்களுக்கு பயண முடிவின்போது பற்றுச் சீட்டு வழங்கப்படுவதும் விதிமுறையாகும். ஆனால் இது குறித்து கிராமப் புறங்களில் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள் கவனம் செலுத்துவதில்லை.



முகம்மட் றிஸான்
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# மன்னார் மடு மாதா ஆவணி பெருவிழா





(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத பெருவிழா நேற்று திங்கட்கிழமை(15) காலை சிறப்பாக இடம்பெற்றது.

நேற்று திங்கட்கிழமை காலை 6.15 மணி அளவில் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில், அனுராதபுரம் மறை மாவட்ட ஆயர் நோபேட் அன்ராடி ஆண்டகை, கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயர் மேதகு அன்ரன் ரஞ்சித் பிள்ளை நாயகம் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

இந்த நிலையில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் அன்னையின் ஆசீர்வாதத்தை வேண்டி மடு திருத்தலத்திற்கு வருகை தந்தனர்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம் பெற்றதோடு மடு அன்னையின் ஆசி பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

# பூநகரி பிரதேசத்தில் தொடர்ந்தும் குடிநீரின்றி மக்கள் அவதி

(பரந்தன் குறூப் நிருபர்)



கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்தில் பல்வேறு பகுதியில் தொடர்ந்தும் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது. தமக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அதிகூடிய குடிநீர் நெருக்கடி நிலவும் பகுதியாக பூநகரி பிரதேசம் காணப்படுகின்றது.

பூநகரி பிரதேசத்தில் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளில் வாழ்ந்து வரும் 7,500இற்கும் மேற்பட்ட குடும்பங்களில் 10 கிராம அலுவலர் பிரிவுகளில் வாழும் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வருடம் முழுவதும் குடிநீர் விநியோகிக்க வேண்டிய நிலமை காணப்படுகின்றது. அத்துடன் ஒன்பது பாடசாலைகளுக்கும் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்நிலையில் மறவன் குறிச்சி, கொல்லக்குறிச்சி இராமலிங்கம் வீதி, பரமன்கிராய், கறுக்காய் தீவு, செட்டியகுறிச்சி, ஞானிமடம், சித்தங்கேணி நல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் போதிய குடிநீர் வசதிகள் கிடைப்பதில்லை என்றும் இதனால் தமக்கான குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் வடக்கு ஆளுநர் கரிசனை

கோப்பாய் குறூப் நிருபர்



சிறையில் நீண்ட காலமாக உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கரிசனை செலுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான சி.வி விக்னேஸ்வரனால் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பேசப்பட்டது. அது குறித்த விபரங்கள் அடங்கிய ஆவணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வட மாகாண ஆளுநருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

வழக்குகள் இடம் பெற்று, நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் நீண்ட காலமாக வழக்குகள் இடம்பெற்றுகொண்டிருக்கும் கைதிகள் உள்ளிட்ட 46 தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு அனுப்பப்பட்ட ஆவணத்தில் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்கள் தொடர்பில் வட மாகாண ஆளுநர் ஏற்கனவே நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவுடன் தொலைபேசி வாயிலாக உரையாடியிருந்தார்.

இந்நிலையில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச மற்றும் முன்னாள் நீதி அமைச்சர் அலிசப்ரியுடனும் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளதாக ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# கல்முனை பிரதேசத்தில் நன்னீர் மீனுக்கு கிராக்கி

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கல்முனையை அடுத்துள்ள விவசாயக் கண்டங்களில் சிறுபோக அறுவடை ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து நன்னீர் மீன்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

நாவிதன்வெளி பிரதேச செயலக எல்லை வீதியில் காணப்படும் கிட்டங்கி தாம்போதி ஆற்றில் பிடிக்கப்படும மீன்கள் கிலோ எண்ணூறு ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

அண்மித்த கிராமமான கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, நற்பிட்டிமுனை, சென்ரல் கேம்ப் மற்றும் சிங்கள மக்களே அதிகளவு மீனைகொள்வனவு செய்கின்றனர். கடும்மழையிலும் கொடிய உஷ்ணத்திலும் தொழிலை செய்யும் எங்களுக்கு மீன்பிடி கட்டிடம் ஒன்று அமைத்துத்தர அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமென மீனவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

## சாய்ந்தமருது பிரதேசத்தில்

# சமுர்த்தி பயனாளிகளுக்கான வீடுகள் நிர்மாணம்

மாளிகைக்காடு குறூப் நிருபர்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சௌபாக்கியா வீடமைப்பு திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகளுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (11) நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.ஜஃபரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், சமுர்த்தி மகாசங்க சிரேஷ்ட முகாமையாளர் ஏ.எல்.யூ.ஜூனைதா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி மகாசங்க உதவி முகாமையாளர் ஏ.எம்.எம்.றியாத் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் 9 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் 96,460 ஹெக்டெயரில் சிறுபோக நெற்செய்கை அறுவடை

## எரிபொருள் பற்றாக்குறையால் விவசாயிகள் சிரமம்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

கிழக்கு மாகாணத்தில் 96,460 ஹெக்டெயரில் சிறுபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பமாகியுள்ளது. இம்முறை மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் குறைந்தளவிலே சிறுபோக நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன் தற்போது அதற்கான அறுவடைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

இதற்கமைய மட்டக்களப்ப மாவட்டத்தில் 32,260 ஹெக்டெயரிலும், அம்பாறை மாவட்டத்தில் 64,200 ஹெக்டெயரிலும் சிறுபோக நெற்செய்கை பண்ணப்பட்டிருந்தன. இங்குள்ள விவசாயிகள் மிகுந்த சிரமங்களுககு மத்தியிலே தங்களது நெற்செய்கை செய்திருந்தனர்.

தற்போது அறுவடை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் அறுவடை இயந்திரங்களுக்கான போதியளவு டீசல் கிடைக்காமையால் குறித்த காலப்பகுதிக்குள் அறுவடை செய்து முடிக்க முடியாதுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

உரத்தட்டுப்பாட்டுக்கு மத்தியில் 40 ஆயிரம் ரூபாவிற்கு உரம் பெற்று, இரசாயன எண்ணெய் 20 ஆயிரம் ரூபாவுக்கு பெற்று, தங்க நகைகளை அடகு வைத்து குத்தகைப்பணம் கொடுத்து, எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுத்து இச் சிறுபோக நெற்செய்கையை செய்த போதிலும் ஒரு ஏக்கருக்கு 10 தொடக்கம் 15 வரையான நெல் மூட்டையே கிடைக்கின்றன என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சிறுபோக அறுவடையை சுமுகமாக மேற்கொள்வதற்கு எரிபொருளின் விலையேற்றம் மற்றும் தொடர்ச்சியாக குறித்த அளவுக்கு மேலதிகமாக டீசல் கிடைக்காமை போன்ற காரணங்களால் அறுவடைச் செலவும் அதிகரித்துள்ளது. இதனால் கிழக்கில் அதிகளவிலான விவசாயிகள் தங்களது நெற்செய்கையை கைவிட்டுச் செல்லும் துர்பாக்கிய நிலைக்குச் சென்றுள்ளனர்.

எதிர்வரும் பெரும்போகச் செய்கையை செய்வதற்கு மானிய அடிப்படையில் உரம் வழங்கப்படவேண்டும் அத்துடன் விவசாயிகளுக்குரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். இதனை இடைக்கால வரவு செலவு திட்டத்தில் அரசாங்கம் உள்ளடக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மானிப்பாயில் வாள்வெட்டு; இளைஞனை தாக்கிய மூவர் தப்பியோட்டம்

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் இளைஞன் மீது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வாள் வெட்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தெல்லிப்பளையை சேர்ந்த ஜெயக்குமார் சஜீந்திரன் (வயது 21) எனும் இளைஞன் மீது மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் தாக்குதலை மேற்கொண்ட பின்னர் அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். வாள் வெட்டுக்கான காரணம் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


# சிறு விளம்பரம்


## மோட்டார் வாகனங்கள்

30-64 3 0 நிசான் சிவிலியன் பஸ் 1984 அதி யுயர் விலைக்கு, வெலிபெல் பினான்ஸ் பி எல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071 4542958. 047043

107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

WP-CAH-3336 Toyota esquire 2015 கார். அதியுயர் விலைக்கு, வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071 4542958. 047042

119



பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

WP-PS-8645 மஹிந்திரா மெக்சிமோ 2012 அதியுயர் விலைக்கு, வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071 4542958. 047040

### அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்மலானை புனித ரீட்டா வீதி, இலக்கம் 72இல் வசிக்கும் கோதாகொடகே நந்தசேன ரணவீர (490521925V) ஆகிய நான், இரத்மலானை புனித ரீட்டா வீதி, இலக்கம் 72 இல் வசித்த எளியெதுர த்னாவத்தீ ரணவீர (556600376V) இற்கு வழங்கப்பட்டதும், பண்டாரகம, கல்துடே "அபயமினி" இல் வசிக்கும் களுத்துறை பிரசித்த நொத்தாரிசு திருமதி.தூவகே தம்மிகா பிரியநந்தனீ குணசேகர என்பவரினால் 2022 டிசம்பர் 08 அன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 517 இலக்கமுடையதும் 2003 பெப்ரவரி 28 அன்று, புத்தக இலக்கம் 251 தொகுதி 70 ஆம் பக்கத்தில் 2017 தினப்புத்தக இலக்கத்தின் கீழ் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அற்றோணித் தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக்கப் படுகின்றதென இலங்கை சனநாயக சோசலிஷ குடியரசு சிற்கும், அதன் பொது மக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். மேலும், இதன் பின்னர் குறித்த அற்றோணி தத்துவத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் எந்தவிதமான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது செயற்பாடுகளிற்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

கோதாகொடகே நந்தசேன ரணவீர

### 7ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

எனது இல - ARA/LND5/ACQUI/BANGA/W.LINE

காணி இல - 4-3/9/2017/WS/10

ஒரு பகிரங்க தேவைக்காக கீழ் விபரிக்கப்பட்ட காணியை எடுத்துக்கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. இக்காணி தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள விசாரணைகள் தொடர்பாக 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்று இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 2283/31 ஆம் இலக்க 2022.06.08 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | - வடமேல் |
| மாவட்டம் | - புத்தளம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | - ஆராச்சிக்கட்டு |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - 573, பங்கதெனி |
| கிராமம் | - கும்புட்டுகுளிய |
| காணியின் பெயர் | - கும்புட்டுக்குளிய தோட்டம் |
| வரைபட இலக்கம் | - பு.5538 |
| துண்டு இலக்கம் | - 01,02,03,05 |

**2022.08. 09**
**பிரதேச செயலகம்,**
**ஆராச்சிக்கட்டு.**

**ஈ.ஏ.டி.எம்.அத்துகோரல,**
**பிரதேச செயலாளர்,**
**ஆராச்சிக்கட்டு.**

### இலங்கை துறைமுக அதிகார சபை

**பிரசித்த ஏல விற்பனை அறிவித்தல்**
**அழுகக்கூடிய பண்டங்களின் விற்பனை**

**ஏலவிற்பனை நடைபெறும் திகதி : 2022.08.18**

**எனது இலக்கம் LD/S/T/444/2022/ SAGT&LD/S/T/445/2022/SAGT**

கொழும்பு துறைமுகத்தின் SAGT மற்றும் UCT முற்றங்களில் வைக்கப்பட்டுள்ள சம்பா அரிசிகளுடன் கூடிய கொள்கலன்கள் (08) எட்டைக் கொள்வனவு செய்து அகற்றிக்கொள்வதற்காக , 2022.08.18 அன்று 10.30 மணிக்கு பண்டாரநாயக்க தடாகத்தின் நலன்புரிக் கட்டிடத்தில் இவ் ஏல விற்பனை மேற்கொள்ளப்படும்.

ஏலவிற்பனை வளாகத்திற்கு நுழைவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக, மற்றும் கேள்விப்படிவங்களிற்காக மீளளிக்கப்படாத ரூபா 1000/- இற்கான தொகையை பெசேவ மற்றும் மீளளிக்கப்படும் 200,000/- இற்கான பிணைத்தொகையையும் செலுத்தி, கெனல் முற்றம், இலக்கம் 15, லோட்டஸ் வீதி, கொழும்பு - 01 இலுள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவு, விற்பனை பிரிவு அலுவலகத்தில 2022.08.17 அன்று 08.30 மணி முதல் 11.00 மணி வரையான காலப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

அன்றைய தினம் 13.00 மணி முதல் 14.00 மணி வரை பண்டங்களை பரிசீலனை செய்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களிற்காக www.slpa.lk என்ற இணையத் தளத்திற்குள் பிரவேசிக்கவும்

**பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)**
**2022.08.16**
**சேவை வழங்கல் பிரிவு**
**இலங்கை துறைமுக அதிகார சபை**

தேசிய இரத்தினம் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை
இரத்தினம் மற்றும் ஆபரணங்கள் தொடர்பான கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**முன்னணியிலுள்ள அமைவிடத்தில் வாடகைக்கு கடைகளுக்கான இடவசதிகள்**

**விலைமனு இல.: NGJA/18/80/2022-02**

தேசிய இரத்தினம் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபைக்கு சொந்தமானதும் கொழும்பு-03, அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ் 12 ஆம் இலக்கத்திலுள்ளதுமான ''மெக்சன்ஸ் கோபுரத்தின்'' இடைநிலை மாடியின் 12 ஆம் இலக்கத்திலுள்ள தரை மாடியில் கடை இடப்பரப்புக்களை வாடகைக்கு பெறுவதற்காக இரத்தினம் மற்றும் ஆபரண கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய இரத்தினம் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| பெறுகையின் விளக்கம் | விலை மற்றும் திகதி |
|---|---|
| மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | 3,5000 ரூபா மற்றும் பெசேவ |
| விலைமனு ஆவணங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி மற்றும் நேரம் | 2022.09.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| விலைமனுக்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் | 2022.09.06 ஆம் திகதியன்று மு.ப. 10.15 மணிக்கு |

**நிபந்தனைகள்:**

(1) விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

(2) 2022.08.17 ஆம் திகதியிலிருந்து 2022.09.05 ஆம் திகதி வரையும் சாதாரண நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,5000 ரூபா மற்றும் பெசேவ ஆகியவற்றை செலுத்திய பின்னர், கொழும்பு-03, அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ் ''மெக்சன்ஸ் கோபுரம்'' 12 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய இரத்தினம் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவிற்கு பெறுகைக்கான உதவிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று உங்களால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

(3) 2022.09.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பிந்தாமல் கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் பதிவுத் தபாலில் தேசிய இரத்தினம் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இல. 12, ''மெக்சன்ஸ் கோபுரம்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது தேசிய இரத்தினம் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Providing shops on rent basis – 2022" என்ற சொற்கள் குறித்துரைக்கப்படல் வேண்டும்.

(4) பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் குறித்துரைக்கப்பட்டவாறு விலைமனுக்கோரல் ஆவணங்களின் உரித்தான பெறுமதிக்காக விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து ஆகக்குறைந்தது 119 நாட்காட்டி நாட்களுக்கு (2022.09.06 ஆம் திகதியிலிருந்து 2023.01.03 ஆம் திகதி வரையுமானது) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதுமான வங்கி உத்தரவாதம்/ விலைமனு பிணையமொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) 2022.09.06 ஆம் திகதியன்று மு.ப. 10.15 மணிக்கு தேசிய இரத்தினம் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் வழங்கல் பிரிவில் விலைமனுக்கள் திறக்கப்படும். மு.ப. 10 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் பங்கு பெற்றலாம்.

மேலதிக விசாரணைகளுக்கு: உதவி பணிப்பாளர் (பெறுகை) - 071 536 2 536

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய இரத்தினம் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,**
**இல. 12, ''மெக்சன்ஸ் கோபுரம்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு-03, இலங்கை.**
**தொலைபேசி: 011-2329295, 2325364 மற்றும் 2390645-8, தொலைநகல்: 011-2320758, 011 2332197**
**இணையதளம்: www.ngja.gov.lk**

எனது இலக்கம் BD/UP/LND1/UMAYA/THALPI/02-1

காணி அமைச்சின் இலக்கம் : 4 - 39/2014/IR/58

பிரதேச செயலகம்
ஊவா பரணகம
2022.08.12

**காணி கையகப்படுத்தல் சட்டம் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

காணி கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ், அரசுடைமையாக்கப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் காணிக்கான, அச்சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரித்துடைமை மற்றும் நட்டஈடு தொடர்பான பரிசீலனை, 2022.09.15 அன்று ஊவா பரணகம பிரதேச செயலகத்தில் என்னால் மேற்கொள்ளப்படுமென பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இக்காணி தொடர்பாக, தொடர்புள்ள நபர்கள் அவ்வேளையில் சமுகமளித்தல் வேண்டும். மேலதிக விபரங்களிற்காக இலக்கம் 2291/38 மற்றும் 2022.08.04 திகதியிட்ட அரச வர்த்தமானப் பத்திரிகையைப் பார்வையிடவும்.

| | |
|---|---|
| பிரதேச செயலகப்பிரிவு | - ஊவா பரணகம |
| ஆரம்ப வரைபட இலக்கம் | - அ.க.பி.392 இன் மேலதிக இல 01 இன் பக்க இல 02 |
| துண்டு இலக்கம் | - 145 முதல் 228 வரை (75 துண்டுகள்) |
| மொத்தக் காணியின் விஸ்தீரணம் | - 21.9630 ஹெக்டயர் காணி அமைந்துள்ள கிராமம் - 37-A வேத்தலாவ |
| அமைவிடம் | - பதுளை மாவட்டம் ஊவா பரணகம பிரதேச செயலக பிரிவின் கம்பஹா கோரளையின் சிறு பிரிவின் வேத்தலாவ கிராம அலுவலர் பிரிவின் |

**களனிஹேகம**
**சுவினீத்தா குணசேகர**
**பிரதேச செயலாளர்**
**ஊவா பரணகம**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

PEOPLE'S BANK

**மக்கள் வங்கி**

**ஓய்வூதிய நிதியம்**
**(1996 ஆம் ஆண்டுக்கு பிந்தைய)**

**சம்பளம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம்**

மக்கள் வங்கி தலைமை அலுவலகம்
கொழும்பு - 02.

## 01 வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 2022

1996 ஆம் ஆண்டுக்கு பிந்தைய ஊழியர்களுக்கான மக்கள் வங்கி ஓய்வூதிய நிதியத்தின் 01 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் **2022 ஆகஸ்ட் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு** கொழும்பு 13. சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

ஓய்வூதிய நிதிய அங்கத்தவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்தினத்திற்கான உங்கள் பங்களிப்பை இது வரை உறுதி செய்யாதோர். தயவுசெய்து ஓய்வூதிய நிதியத்தின் செயலாளருக்கு **22.08.2022 இற்கு முன்னர்** தொலைபேசி மூலமாகவோ கடிதம் மூலமாகவோ அறிவிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். (தொலைபேசி இல. 011-2481328)

**கங்கா வீரசிங்க**
செயலாளர்
மக்கள் வங்கி ஓய்வூதிய நிதியம்
(1996 ஆம் ஆண்டுக்கு பிந்தைய)
10 ஆகஸ்ட் 2022

## விலைமனுக் கோரல் அறிவித்தல்

**மாவனல்லை பிரதேச சபைக்கு உரித்தான சொத்துக்களை குத்தகைக்கு வழங்குதல்**

**2022.09.05ம் திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரையிலான காலத்திற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன**

| | |
|---|---|
| விலைமனுப் பத்திரங்களை வழங்குதல் | - 2022.08.15 ஆம் திகதி முதல் 2022.08.29 ஆம் திகதி பி.ப.2.30 வரை |
| விலைமனுப் பத்திரங்களை கையேற்றல் | - 2022.08.30 ஆம் திகதி மு.ப. 10.00 வரை |
| விலைமனுப் பத்திரங்களை திறத்தல் | - 2022.08.30 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாவனல்லை பிரதேச சபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும். குறித்த நிகழ்விற்கு விலைமனுதாரர் அல்லது அவரின் எழுத்து மூலமான அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவருக்கு பங்குபற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும். |
| விண்ணப்பப்பத்திர கட்டணம் | - 1000.00 |

அட்டவணை

| தொடர் இலக்கம் | விலைமனுக் கோரும் இடத்தின் பெயர் | குறைந்த வருடாந்த கேள்வி விலை | மீளச் செலுத்தும் விலைமனு வைப்புத் தொகை | மீளச் செலுத்தாத விலைமனு வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 01 | உயன்வத்த மாட்டிறைச்சிக் கடை | 460000.00 | 23000.00 | 5000.00 |

விலைமனுப் பத்திரங்களை உரிய நேரத்திற்கு முன் மாவனல்லை பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் அல்லது "தவிசாளர், பிரதேச சபை, மாவனல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**மேலதிக தகவல்களுக்கு**
**T.P- 035-2246275**

**2022.08.15 ஆம் திகதி**
**மாவனல்லை பிரதேச சபையில்.**

**R.P.N தஸந்த ஸ்டிவன்,**
**தவிசாளர்,**
**மாவனல்லை பிரதேச சபை**

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி ஓய்வூதிய நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டங்கள்

2022 ஜூலை மாதம் 09ஆம் திகதி நடைபெறவிருந்த இலங்கை வங்கி ஓய்வூதிய நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டங்கள் 2022 செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி சனிக்கிழமை பின்வரும் நேரங்களில் கொழும்பு 01 இல் உள்ள இலங்கை வங்கித் தலைமையகத்தின், 3ஆவது மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

1. இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கை நிதியம்-2014 - மு.ப 8.30
   இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் - 2014 இன் விசேட பொதுக்கூட்டம் - மு.ப 9.00
2. இலங்கை வங்கி விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2014 - மு.ப 9.30
3. இலங்கை வங்கி சேமலாப நிதியம் - மு.ப 10.00
4. இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் - மு.ப 11.00
5. இலங்கை வங்கி விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - பி.ப 12.30
   இலங்கை வங்கி விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதிய விசேட பொதுக்கூட்டம் - பி.ப 1.00

*மேற்குறிப்பிட்ட நிதியங்களின் அங்கத்தவர்கள் தத்தம் தொடர்புபட்ட கூட்டங்களுக்கு மட்டும் வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

நிகழ்ச்சி நிரல் மற்றும் கணக்காய்வு செய்த கணக்குகள் ஆகியவற்றை ஓய்வூதியப் பிரிவிலும் இலங்கை வங்கிக் கிளைகளிலும் / தலைமையகப் பகுதிகளிலும் பார்வையிடலாம்.

டபிள்யு.எம்.ஏ வனிகசேகர - செயலாளர்

இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் - 2014
இலங்கை வங்கி விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2014
இலங்கை வங்கி சேமலாப நிதியம்
இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கை நிதியம்
இலங்கை வங்கி விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம்

**ஓய்வூதிய பராமரிப்புப் பகுதி**
25ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமையகம்,
"BOC சதுக்கம்"
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொ.பே.இல / தொலைநகல் : 011-2544316
மின்னஞ்சல் : agmsup@boc.lk / bocsup@boc.lk

16 ஆகஸ்ட் 2022

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சு

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

**சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விலைமனுக்கோரல் – 2022/2023**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் சிற்றுண்டிச்சாலை சேவையை நடாத்திச் செல்வதற்காக இவ்வேலைக்காக பதிவு செய்து கொண்டுள்ள அனுபவம் வாய்ந்த சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்பவர்களிடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2022-09-06ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 2022-10-01ஆம் திகதி முதல் சிற்றுண்டிச்சாலை சேவை ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

01. கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் தலைமை அலுவலகத்தின் 15ஆம் மாடியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையில் நாளொன்றுக்கு சுமார் இரண்டாயிரம் (2000) பணியாட்தொகுதியினருக்கு உணவு வழங்குதல் வேண்டும் என்பதுடன் இந்த சிற்றுண்டிச்சாலை நவீன துணைச்சாதனங்கள் மற்றும் உபகரணங்களையும் கொண்டது.

02. சிற்றுண்டிச்சாலைக்காக வாடகை அறவிடப்படமாட்டாது. சிற்றுண்டிச்சாலைக்கான தளபாடங்கள் திணைக்களத்தினால் இலவசமாக வழங்கப்படும் என்பதுடன் செலவிடப்படும் மின்சாரம், நீர் மற்றும் எரிவாயு என்பனவற்றுக்கான கட்டணச்சீட்டின் 5% தொகை மட்டும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்படும். இந்த வசதிகளை கவனத்திற் கொண்டு நிவாரண விலையில் உணவு பானங்களை வழங்குதல் வேண்டும்.

03. 2022-08-16ஆம் திகதி முதல் 2022-09-05ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள கட்டிடத்தின் 15ஆம் மாடியிலுள்ள பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ பிரிவில் குறித்த விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. விலைமனுதாரர்களினால் கடிதத் தலைப்பின் மூலம் செய்யப்படும் வேண்டுகோளின் பேரில் 2022-08-16ஆம் திகதி முதல் 2022-09-05ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆணையாளர் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்) அவர்களிடமிருந்து விலைமனு மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. விலைமனு மாதிரிப் படிவங்கள் உட்பட கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கேள்விக் கட்டணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளரின் பெயரில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்குக் கிளையின் பிரதான சிறாப்பருக்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. விலைமனுக்களுடன் 10,000.00 ரூபா பெறுமதியான இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கோரியவுடன் செலுத்தப்படக்கூடிய பிணை முறியொன்று அல்லது மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளரின் பெயரில் வைப்புச் செய்தல் வேண்டும்.

07. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2022-09-06ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ஆணையாளர் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்), உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியினால் நேரில் கொண்டு வந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடத்தின் 15வது மாடியில் அமைந்துள்ள பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவக் கிளையில் வைக்கப்பட்டுள்ள விலைகோரல் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிற்றுண்டிச்சாலை சேவை வழங்கலுக்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

08. விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்து கொள்ளலாம். உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடத்தின் 15வது மாடியில் உள்ள ஆணையாளரின் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்) அலுவலகத்தில் 2022-09-06ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

09. மேலதிக விபரங்கள் தேவையாயின் இத்திணைக்களத்தின் பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவக் கிளையின் 0112135461, 0112135462 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**பாரிய அளவிலான பெறுகைக் குழுவின் தலைவர்,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**
**2022-08-16.**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனிதநேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் புதிய கட்டிடத்திற்காக மரத் தளபாடங்கள் மற்றும் உருக்கு கதிரைகளை வழங்கல்**

கேள்வி இல.: **FHSS/2022/01**

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் செயற்றிட்டப் பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
   ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கீழே குறிப்பிட்டுள்ள அம்சங்களின் முழுத் தொகைக்குமாக விலைமனுக்களை முன்வைத்தல் வேண்டும்.

| அம்ச இல. | அம்சத்தின் பெயர் | அளவு | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|
| | உருக்கு கதிரைகள் | | 150000 |
| 01. | நிர்வாகிகளுக்கான கதிரைகள் (CH1) | 129 | |
| 02. | எழுதுவினைஞர்களுக்கான கதிரைகள் (CH5) | 7 | |
| 03. | வருகையாளர்களுக்கான கதிரைகள் (CH6) | 17 | |
| | **மரத் தளபாடம்** | | 130000 |
| 04. | மேசை (TBL1) | 129 | |
| 05. | மேசை (TBL2) | 12 | |
| 06. | கப்போட் (CUP2) | 7 | |

2. மரத்தளபாடங்களின் நிகரான அளவுகளை அரச நிறுவனங்களுக்கு வழங்குதலில் ஆகக் குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல்களை சமர்ப்பிக்கலாம்.
3. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்கோரல் ஆவணத்துடன் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியில் வங்கி உத்தரவாதப் பாங்கில் உருக்கு கதிரைகளுக்கு ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் இலங்கை ரூபாவிற்கான தொகையிலும் (150,000 இ.ரூபா) மரத் தளபாடங்களுக்கு ஒரு இலட்சத்து முப்பதினாயிரம் இலங்கை ரூபாவிற்கான தொகையிலும் (130,000 இ. ரூபா) விலைமனுப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு உத்தரவாதமானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது நிபந்தனையற்றதும் இலகுவில் ரொக்கப் பணமாக மாற்றக்கூடிய வகையில் அமைந்ததாகவும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தலும் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மனிதநேயங்கள் மற்றும் சமுக விஞ்ஞானங்கள் பீட பிரதி நிதியாளரிடமிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை அலுவலக நேரங்களில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக நிதிப் பிரிவில் இலவசமாக பரீட்சிக்கலாம். (தொலைபேசி இலக்கம்: 011-2758481).
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022.08.16 ஆம் திகதியிலிருந்து மு. ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் வேலை நாட்களில் பல்கலைக்கழக சிறாப்பரிடம் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், மனிதநேயங்கள் மற்றும் சமுகவிஞ்ஞானங்கள் பீட நிதியாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்று சமர்ப்பிப்பதன் மூலம் ,ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தனித்தனியான உறைகளில் சேர்க்கப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு அவையிரண்டும் தனியானதொரு உறையில் சேர்க்கப்பட்டு மூன்று உறைகளின் இடது பக்க மேல் மூலையிலும் வேலைப் பெயரைக் குறிப்பிட்டு, முத்திரையிடப்பட்டு துணைவேந்தர் மனிதநேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொட என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், மனிதநேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீட பிரதி நிதியாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
8. நகல்பிரதியானது மூலப்பிரதியின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதியாகவிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 2022 செப்டம்பர் 6 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு மனிதநேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீட சபை அறையில் திறக்கப்படுவதுடன் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது (ஆண்/ பெண்) பிரதிநிதியானவர் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்.
10. பூர்த்தி செய்யப்படாத மற்றும் தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுக்களை ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்)**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில,**
**நுகேகொட.**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

# பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் 'காணாமல்போனதில்' இலங்கை சாதனை

இங்கிலாந்து பெர்மிங்ஹாம் நகரில் இடம்பெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற 73 நாடுகளில் அதிக வீரர்கள் மற்றும் அதிகாரிகள் காணாமல் போன நாடாக இலங்கை பதிவாகியுள்ளது.

இவ்வாறு பெர்மிங்ஹாமில் காணாமல்போன இலங்கை வீரர்கள் மற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற இலங்கை உட்பட ஐந்து நாடுகளின் 17 வீரர்கள் மற்றும் அதிகாரிகள் காணாமல்போயிருப்பதாக சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இறுதியாக கடந்த ஓகஸ்ட் 10 ஆம் திகதி நாடு திரும்புவதற்கு தயாராக இருந்த இலங்கை குழாத்தின் பணிக் குழுவைச் சேர்ந்த உதவியாளர் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

அவர் இலங்கை மல்யுத்த சம்மேளனத்தின் செயலாளராகவும் செயற்பட்டவர் என்று அடையாளம்



காணப்பட்டுள்ளது. விளையாட்டு விழா முடியும்வரை இலங்கை குழாத்தின் பணிகளை செய்து வந்த அவர் பின்னர் காணாமல்போயிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

கெமரூன், பொட்ஸ்வானா மற்றும் கானா ஆகிய நாடுகளில் மூன்று வீரர்கள் மற்றும் பாகிஸ்தானின் இரு வீரர்கள் இந்த விளையாட்டு விழாவில் பங்கேற்றிருந்த வேளை காணாமல் போயுள்ளனர்.

இதில் பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் இலங்கையில் இருந்து வந்த வீரர்கள் காணாமல்போயிருப்பது சர்வதேச ஊடகத்தின் அவதானத்தை பெற்றுள்ளது.

இம்முறை விளையாட்டு விழாவில் இலங்கை சார்பில் 110 வீர, வீராங்கனைகள் மற்றும் 51 அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். இலங்கை மொத்தம் 4 பதக்கங்களை வென்றது.

ஜூடோ மற்றும் மல்யுத்த வீராங்கனைகள், இரு மல்யுத்த வீரர்கள், மூன்று குத்துச்சண்டை வீரர்கள், இரு கரப்பந்தாட்ட வீரர்கள், ஜூடோ அணியின் முகாமையாளர் மற்றும் ஒட்டுமொத்த குழாத்தின் உத்தியோகபூர் படப்பிடிப்பாளர் ஆகியோர் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின்போதும் அவ்வப்போது காணாமல்போயினர்.

எவ்வாறாயினும் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க அனுமதி பெற்ற இலங்கையர் உட்பட வெளிநாட்டினருக்கு இங்கிலாந்தில் தங்கி இருப்பதற்கு 180 நாள் விசா அனுமதி உள்ளது.

காணாமல்போனோர் பற்றிய பல விபரங்கள் கிடைத்தபோதும் செல்லுபடியான விசா காலம் முடியும் வரை சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க முடியாது என்று பெர்மிங்ஹாம் பொலிஸார் மற்றும் இங்கிலாந்து குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## ஓட்டமாவடி வளர்பிறை கழகத்தின் சிவப்பு அணி சம்பியனாகத் தெரிவு



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

ஓட்டமாவடி வளர்பிறை விளையாட்டு கழகத்தின் உதைபந்தாட்ட வீரர்களை வலுப்படுத்தும் வகையில் உதைபந்தாட்ட துறையில் ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஒழுங்கு செய்திருந்த கழக வீரர்களுக்கிடையிலான கண்காட்சி உதைபந்தாட்ட போட்டியில் கழகத்தின் சிவப்பு அணி இவ்வருடத்திற்கான சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் கழகத்தின் சிவப்பு அணியும் கழகத்தின் மஞ்சள் அணியும் களம் இறங்கின.

இதில் 6–3 என்ற கோல் கணக்கில் சிவப்பு அணி இவ்வருடத்திற்கான சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

சிவப்பு அணி சார்பில் எம்.எச்.டி. ஆஸிர் 3 கோல்களையும், றமீம் 2 கோல்களையும் எம்.கே.எம். ஸீத் ஒரு கோலையும் புகுத்தியிருந்தனர்.

மஞ்சள் அணி சார்பில் ஆஸிக் அஹ்மத் 2 கோல்களையும் ஏ.எச். பின் தாஜுதீன் ஒரு கோலையும் புகுத்தினர்.

## அட்டப்பள்ளம் மாணவர்கள் மாகாண மட்டத்திற்கு தெரிவு

**காரைதீவு குறூப்**



கல்முனை வலயத்தில் மிகவும் பின்தங்கிய அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய மாணவர்கள் இருவர் மாவட்ட மட்டத்தில் பங்குபற்றி 2022 மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

12 வயதுக்குட்பட்ட நீளம் பாய்தல் போட்டியில் து. பவிக்ஸா 1ஆம் இடத்தையும் 14 வயதுக்குட்பட்ட குண்டெறிதல் போட்டியில் ச. டோஜித் 2ஆம் இடத்தையும் பெற்றனர். மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வில் அதிபர் ச. ரகுநாதன், பிரதிஅதிபர் த. நடேசலிங்கம், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் த.ம. றிஸ்மி ஆகியோர் பங்கேற்றனர்.

## புத்தளம் லேஜன்ஸ் சம்பியன்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் லேஜன்ஸ் கால்பந்தாட்ட கழகத்துக்கும் லிவர்பூல் கால்பந்தாட்ட கழகத்துக்குமிடையில் 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி கடந்த ஞாயிறன்று (14) புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இளமைக் காலத்தில் தத்தமது கழகங்களுக்கு விளையாடியவர்கள் ஒட்டுமொத்தமாக லேஜன்ஸ் அணியிலும், லிவர்பூல் உதைபந்தாட்ட கழகத்தின் முன்னாள் முன்னணி வீரர்கள் லிவர்பூல் அணியிலும் இடம்பெற்றிருந்தனர்.

இந்த போட்டியில் 02–01 கோல்களினால் லேஜன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ........................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ........................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ........................
வாக்களித்தவர் பெயர் : ........................
முகவரி : ........................
மொபைல் இல. : ........................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 20-08-2022 இல. 21




# சர்வதேச செய்திகள்

## எகிப்து தேவாலயத்தில் தீ: 41 பேர் உயிரிழப்பு



எகிப்து தேவாலயம் ஒன்றில் ஏற்பட்ட தீயில் பல டஜன் பேர் உயிரிழந்தனர். தேவாயத்தில் இருந்து தப்பும் முயற்சியில் ஏற்பட்ட நெரிசலிலேயே பலரும் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் குறைந்தது 41 பேர் உயிரிழந்ததோடு பலரும் காயமடைந்தனர். உயிரிழந்தவர்களில் சிறுவர்களும் இருப்பதாக நம்பப்படுகிறது.

கிசாவில் உள்ள கொப்டின் அபு சிபின் தேவாலயத்தில் ஆராதனைக்காக 5,000 வழிபாட்டாளர்கள் வரை கூடியிருந்தபோதே மின்சார கோளாறினால் தீப்பற்றியுள்ளது. அந்தத் தீ தேவாலயத்தின் வாயில் பகுதியை முடக்கியதை அடுத்து கூடியிருந்தவர்கள் இடையே நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதில் 3 தொடக்கம் 16 வயதுக்கு இடைப்பட்ட 18 சிறுவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக மருத்துவ வட்டாரத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

தீ பரவியதற்கான சரியான காரணம் இன்னும் தெரியவில்லை என்று தீயணைப்புச் சேவை கூறியபோதும், மின்சாரக் கோளாறே அதற்குக் காரணம் என்று அருகிலிருக்கும் மற்றொரு தேவாலயத்தின் அருட்தந்தை பரிட் பஹ்மி குறிப்பிட்டுள்ளார்.

## உலகின் உயரமான ரயில் பாலம் திறப்பு



காஷ்மீரில் உள்ள செனாப் ஆற்றின் குறுக்கே உலகின் மிக உயரமான ரயில் பாலத்தின் தங்க இணைப்பு கடந்த சனிக்கிழமை திறக்கப்பட்டது.

இந்த செனாப் பாலம் சுதந்திரத்தின் பின் முதல் முறையாக ஸ்ரீநகரை இந்தியாவின் ஏனைய பகுதிகளுடன் இணைப்பதாக உள்ளது. ஆர்ச் வடிவில் அமைக்கப்பட்டுள்ள செனாப் ரயில்வே பாலம், நவீன தொழில்நுட்பத்தின் உதவி கொண்டு மிகவும் உறுதியான முறையில் அமைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ருஷ்டியின் தாக்குதல்தாரியுடனான தொடர்பை ஈரான் திட்டவட்டமாக மறுப்பு



எழுத்தாளர் சல்மான் ருஷ்டி மீது கத்திக்குத்து நடத்திய தாக்குதல்தாரியுடன் எந்தத் தொடர்பும் இல்லை என ஈரான் மறுத்துள்ளது. பதிலாக "தி சாடானிக் வேர்சஸ்" புத்தகத்தின் எழுத்தாளர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மாத்திரமே இந்தத் தாக்குதலுக்கு ஒரே குற்றவாளிகள் என்று ஈரான் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ருஷ்டி தனது எழுத்தில் மதத்தை இழிவுபடுத்துவதை கருத்துச் சுதந்திரத்தைக் கொண்டு நியாயப்படுத்த முடியாது என்று ஈரான் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் நாசர் கனானி நேற்று திங்கட்கிழமை டெஹ்ரானில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

"தாக்குதல்தாரியுடனான எந்தத் தொடர்பையும் நாம் திட்டவட்டமாக மறுக்கிறோம். ஈரான் இஸ்லாமிய குடியரசு மீது குற்றம்சாட்ட எவருக்கு உரிமை இல்லை" என்று கனானி குறிப்பிட்டார்.

"இஸ்லாத்தின் புனித விடயங்களை அவமதிப்பதன் மூலம் ஒன்றரை பில்லியனுக்கும் அதிகமான முஸ்லிம்களின் சிவப்புக் கோடு தாண்டப்பட்டதோடு சல்மான் ருஷ்டி தெய்வீக மதங்களைப் பின்பற்றுபவர்களின் கோபத்திற்கும் ஆத்திரத்திற்கும் ஆளாகினார்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1988இல் எழுதப்பட்ட "தி சாடானிக் வேர்சஸ்" நாவலுக்காக இந்தியாவில் பிறந்த எழுத்தாளரான ருஷ்டியின் தலைக்கு சன்மானம் அறிவிக்கப்பட்டது. 1989இல் அப்போதைய ஈரானின் உயர்மட்டத் தலைவர் ஆயதுல்லாஹ் ரூஹுல்லா கொமைனி அந்தப் புத்தகத்தை மதநிந்தனைக்கு உரியது என்று அறிவித்ததோடு அந்த எழுத்தாளர் மற்றும் புத்தகத்துடன் தொடர்புபட்ட பதிப்பாளர்களை கொல்ல முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுத்து மத ஆணை ஒன்றை பிறப்பித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நியூயோர்க்கில் இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதலில் படுகாயமடைந்த ருஷ்டி தற்போது அதில் இருந்து மீண்டு வருகிறார்.

24 வயதான ஹாதி மதார் என்பவரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளார்.

## சீன விமானங்களால் நேபாளத்திற்கு இழப்பு



நேபாள் ஏர்லைன்ஸ் சீனாவிடம் வாங்கிய ஆறு விமானங்கள் கொண்ட தொகுதி செயலிழப்பு மற்றும் துருப்பிடித்து பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

தொலைதூரப் பகுதிகளுக்கு பறக்கும் எதிர்பார்ப்புடன் வரவழைக்கப்பட்ட இந்த விமானங்களில் ஐந்து ட்ரிபுவான் சர்வதேச விமானநிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் துருப்பிடித்து காணப்படுகின்றன. ஆறாவது விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது. 2012 இல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் வாங்கப்பட்ட இந்த விமானங்கள் 2020 ஜுலை தொடக்கம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

## இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதலில் மூன்று சிரிய இராணுவத்தினர் பலி



சிரியாவில் இஸ்ரேல் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் குறைந்தது மூன்று சிரிய படையினர் கொல்லப்பட்டு மேலும் மூவர் காயமடைந்ததாக சிரிய அரச ஊடகம் தெரிவித்துள்ளது. தலைநகர் டமாஸ்கஸுக்கு அருகிலுள்ள கிராமப் பகுதி மற்றும் டார்டூஸின் துறைமுக மாகாணத்தில் "சில புள்ளிகளை" இலக்கு வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.50க்கு ஏவுகணைத் தாக்குதல் இடம்பெற்றதாக சானா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

சிரிய வான் பாதுகாப்புப் படைகள் கடுமையாக எதிர்கொண்டு சில ஏவுகணைகளை வீழ்த்தியதாகவும் இராணுவத் தரப்பை மேற்கோள்காட்டி சானா குறிப்பிட்டது.

எனினும் இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் கருத்துக் கூற மறுத்துள்ளது.

2011ஆம் ஆண்டு சிரியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது தொடக்கம் அந்த நாட்டில் அரச இலக்குகள், அதன் கூட்டணியான ஈரான் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பின் இலக்குகள் மீது இஸ்ரேல் நூற்றுக்கணக்கான வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.